மல்கியா 4:2
யோவான் 17:17
நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 113* *ஜுலை 2025*

## பாத்திரவான்களிலுள்ள தேவனுடைய மன இயல்பாகிய தேவனுடைய பரிசுத்த ஆவி

***PT# 364, April 1949, pp.50-54***

*1.* **பா**த்திரவான்களை நாம் பொதுவாக மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களென்று வித்தியாசப்படுத்துகிறோம். ஆனால் வேதாகமம் சில நேரங்களில் அவர்களை ஒரே வகுப்பைச் சேர்ந்த இரு பாகங்களாகக் குறிப்பிடுகிறது. எடுத்துக்காட்டாக அவர்கள் ஒரே வகுப்பாக எலிசாவிலும், யோர்தானுக்குக் கிழக்கே சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்ட மனாசேயின் பாதி கோத்திரத்தின் மூலமும் அடையாளப்படுத்தப் படுகிறார்கள். இந்த இரு வகுப்புகளும் சேர்ந்து ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியாக இருப்பார்கள். சில நேரங்களில் அவர்கள் இரு தனிப்பட்ட வெவ்வேறான வகுப்புகளாகக் குறிப்பிடப்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக மில்லினிய யுக கோகாத்தியர்கள் மற்றும் கெர்சோனியர்கள், யோவே. *2:28* வசனத்தின் மூப்பர் மற்றும் வாலிபர்கள், *2* தீமோ. *2:20* வசனத்தின் மரமும் மண்ணுமான பாத்திரங்கள் முதலியவைகள். இந்த ஆய்வில் நாம் தேவைக்கேற்ப அவர்களை இந்த இரு கண்ணோட்டங்களிலிருந்தும் கருதுவோம். ஆனால் வேதாகமம் இந்த இரு வகுப்புகளிலும் மூப்பரான பாத்திரவான்களைக் குறித்து அதிக விவரமாகக் குறிப்பிடுகிறது.

*2.* பொதுவாகச் சொன்னால், பாத்திரவான்கள் சம்பந்தமாகப் பரிசுத்த ஆவி என்ற சொற்றொடரையும், அதே அர்த்தமுடைய மற்ற வார்த்தைகளையும் உபயோகிக்கும் போது, அவைகள் வல்லமை என்ற கருத்தில் உபயோகிக்கப்படுகின்றன. இவ்வாறாக ஒத்னியேலின் மேல் வந்திருந்த பரிசுத்த ஆவி (நியா. *3:10*), கிதியோனின் மேல் இறங்கின பரிசுத்த ஆவி (நியா. *6:34*), யெப்தாவின் மேல் இறங்கின பரிசுத்த ஆவி (நியா. *11:29*), சிம்சோனை ஏவின பரிசுத்த ஆவி (நியா. *13: 25; 14: 6, 19; 15: 14*), சவுலின் மேல் இறங்கின பரிசுத்த ஆவி (*1*சாமு. *10:6, 10;11:6*), தாவீது மேல் வந்து இறங்கன பரிசுத்த ஆவி (*1* சாமு. *16:13*) ஆகியவைகள் வல்லமை என்ற கருத்தில் பரிசுத்த ஆவியாக இருந்தன. இவர்களின் மேல் இறங்கி வந்த தேவனுடைய வல்லமையாகிய பரிசுத்த ஆவியானது, அவர்கள் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்பின காரியங்களை அறிந்து கொள்ளவும், அவைகளைச் செய்யவும் அவர்களுக்குத் <u>திறமையை அளித்தது</u>. இவ்வாறாக இந்த பரிசுத்த ஆவியானது, அவர்கள் செய்யும்படி, தேவன் அவர்களுக்கு ஒப்புவித்த



வேலைகளைச் செய்ய, அவர்களைத் தகுதிப்படுத்தினது. ஆனால் இந்த ஆவியானது, யெஷுஆவும் சுவிசேஷ யுக சபையும் பெற்றுக்கொண்ட ஜெநிப்பித்தலின் ஆவியாகவோ அபிஷேகத்தின் ஆவியாகவோ இல்லாதிருந்தது. ஏனென்றால் யெஷுஆ மகிமைப்படுத்தப்பட்ட பிறகு அவர் செய்த ஒப்புரவாகுதலின் புண்ணியத்தைச் செலுத்தி, சபையின் மேல் பரிசுத்த ஆவியை ஊற்றுவதற்கான வல்லமையைப் பெற்றுக் கொள்ளும் வரை, ஆதாமின் விழுந்து போன சந்ததியில் எந்த ஒருவனும் ஜெநிப்பித்தல் மற்றும் அபிஷேகம் என்ற கருத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளக் கூடாததாயிருந்தது (யோவா. *7:39;* அப். *2:33*). ஆசரிப்புக் கூடாரத்தையும் அதின் பொருட்களையும் செய்வது சம்பந்தமாகப் பெசலெயேல், அகோலியாப் மற்றும் அவர்களுடைய உடன் வேலையாட்களுக்குப் பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்ட போது வல்லமை என்ற கருத்தில் தான் கொடுக்கப்பட்டிருந்தது. அதாவது எந்த வேலையைச்

## தூது நிரல்


*1.* பாத்திரவான்களிலுள்ள தேவனுடைய மன இயல்பாகிய தேவனுடைய பரிசுத்த ஆவி....*1*

*2.* யாவே தேவன் நியமித்த பண்டிகைகள்.......*9*

செய்ய கர்த்தர் அவர்களை நியமித்திருந்தாரோ, அந்த வேலை என்னவென்பதை அறிந்து கொள்ளவும், எவ்வாறு செய்ய வேண்டுமென்று அறிந்து கொள்ளவும், அதைச் செய்யவும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட திறமை என்ற கருத்தில் அவர்களுக்குப் பரிசுத்த ஆவி அளிக்கப்பட்டது (*யாத். 31: 3-6; 35: 30-36: 4*). மேலும் இந்த கருத்தில்தான் அது எழுபது மூப்பர்களுக்கும் (*எண். 11:17, 25-29*), பிலேயாமுக்கும் (*எண். 24:2*), யோசுவாவுக்கும் (*எண். 27:18; உபா. 34:9*) பரிசுத்த ஆவி கொடுக்கப் பட்டிருந்தது.

*3.* எபிப்பெனி காலத்தில் தேவன் வாலிபரான பாத்திரவான்களுக்கும் இதற்கொத்த வல்லமையைக் கொடுத்தார். தேவன் அவர்களுக்கு ஆவியினால் ஜெனிப் பித்தலையும் அபிஷேகத்தையும் கொடுக்கவில்லையென் றாலும் அந்த காலத்துக்குரிய அவருடைய வேலை என்னவென்பதை அறிந்து கொள்ளவும், எவ்வாறு செய்ய வேண்டுமென்று அறிந்து கொள்ளவும், அதைச் செய்ய வும் தேவையான திறமையை அவர்களுக்குக் கொடுத்தார். வாலிபரான பாத்திரவான்கள் எபிப்பெனி காலத்தில் செய்த வேலையானது மூப்பரான பாத்திர வான்கள் அவர்களுடைய வாழ்நாளில் செய்த வேலையை விட அதிக முன்னேற்றமடைந்த வேலையாக இருந்ததால், மூப்பரான பாத்திரவான்களுக்குக் கொடுக்கப்பட்டதை விட வாலிபரான பாத்திரவான்களுக்கு எதைச் செய்ய வேண்டும், எவ்வாறு செய்ய வேண்டும் என்பதைப் பற்றிய விரிவான அறிவும், அதைச் செய்வதற்கான அதிக திறமையும் கொடுக்கப்பட்டது. தெய்வீக அகத்தூண்டு தலினால் பழைய ஏற்பாட்டை எழுதின மூப்பரான பாத்திரவான்கள் அதிக மேன்மையான வேலையைச் செய்தார்கள். சில மூப்பரான பாத்திரவான்கள் தெய்வீக அகத்தூண்டுதலினால் மிகவும் மேன்மையான வெளிப் பாடுகளைக் கொடுத்தார்கள். இருந்தாலும் அவர்கள் கொடுத்த தீர்க்கதரிசனங்களை அவர்கள் மிகக் குறைவாகவே புரிந்து கொண்டார்கள் (*தானி. 12: 8, 9; 8: 15 -17; 1 பேது. 1: 10-12*). மேலும் அவர்களுடைய சரித்திர ரீதியான எழுத்துக்களிலுள்ள அடையாள - நிஜ நிறைவேறுதலை அவர்கள் முற்றிலும் புரிந்து கொள்ளா திருந்தார்கள். ஆனால் வாலிபரான பாத்திரவான்கள் நிகழ்கால சத்தியத்துக்குரிய அந்த விவரங்களைப் புரிந்து கொள்ளும் சிலாக்கியத்தைக் பெற்றுக் கொண்டார்கள்.

*4.* மூப்பரான பாத்திரவான்கள் புது சிருஷ்டி களாக இல்லையென்றாலும், ஒரு பரிசுத்த மன இயல்பென்ற கருத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள் என்று சில வேத வசனங்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. வாலிபரான பாத்திரவான்களும் பரிசுத்த இயல்பென்ற கருத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதை அதே வசனங்கள் மறைமுகமாக அர்த்தப்படுத்துகின்றன. புது சிருஷ்டிகள் என்ற கருத்தில் அவர்களில் ஒருவனும் இந்த வாழ்க்கை யில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் சொற்ப காலத்தில் அவர்கள் புது சிருஷ்டிகளாகப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வார் கள். ஆனால் இந்த வாழ்க்கையில் அவர்கள், வீழ்ச்சிக்கு முன்பு ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இருந்த மன இயல் புக்கும், யெஷூ ஆவின் பிரதிஷ்டை மற்றும் ஆவியினால் ஜெனிப்பித்தலுக்கு முன்பு அவருக்கிருந்த மன இயல் புக்கும் ஒத்த நீதியான மன இயல்பை அபிவிருத்தி செய்து கொள்கிற மனுஷர்களாகப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்களுடைய மன இயல்புகளுக் கொத்த மன இயல்பு என்று நாங்கள் சொல்லும்போது



அவர்களுடைய மன இயல்புக்கு மிகவும் சரிசமமான ஒன்றென்பதை நாங்கள் அர்த்தப்படுத்தவில்லை. ஏனென் றால் வீழ்ச்சிக்கு முன் ஆதாமும் ஏவாளும், ஆவியினால் ஜெனிப்பித்தலுக்கு முன் கர்த்தராகிய யெஷூ ஆவும் பாவமில்லாத மனுஷர்களாக இருந்தார்கள். ஆனால் இந்த வாழ்க்கையில் மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திர வான்கள் பாவமில்லாதவர்களாக இருக்கவில்லை.

## இம்மைக்குரிய வாழ்க்கையில் பாத்திரவான்களிலுள்ள பரிசுத்த ஆவி

*5.* அவர்களுடைய நியாயமாக்கப்பட்ட ஜீவியத் தில் அவர்கள் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் அவர் களில் பாவமில்லாத ஆதாம், ஏவாள் மற்றும் மனுஷ னாகிய யெஷூ ஆவிற்கு இருந்த தனிப்பட்ட விசுவாசத் திற்கும் நீதிக்கும் ஒத்த, ஆனால் அபூரணமான விசுவாசத் தையும் நீதியையும் அபிவிருத்தி செய்தன. ஏனென்றால் விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட்ட நிலையில் முன் னேறும் போது, அவர்கள் பெற்றுக் கொண்ட அனுபவங் கள், அவர்களில் பாவம் மற்றும் தப்பறையின் மேல் வெறுப்பையும், நீதி மற்றும் சத்தியத்தின் மேல் அன்பை யும் அபிவிருத்தி செய்தன. வேறு வார்த்தைகளில் சொன்னால், இந்த அனுபவங்களில், விசுவாசம் மற்றும் நீதி என்பவைகள் அதிகமதிகமாக அவர்களை ஆண்டு கொள்ளும் நற்பண்புகளாக இருந்தன. மேலும் இவ்வாறு ஆண்டு கொள்வதின் மூலம், அவர்கள் தேவபக்தியையும் (தேவன்மேல் கடமை அன்பு) சகோதர சிநேகத்தையும் (சக மனுஷன்மேல் கடமை அன்பு) அதிகமதிகமாக அபிவிருத்தி செய்து கொண்டார்கள். இவ்வாறாக விசு வாசம், தேவபக்தி மற்றும் சகோதர சிநேகம் என்ற இந்த மூன்று நற்பண்புகள் (*virtues*)அவர்களில் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருப்பதால் அவர்கள் மனுஷர்களாக நீதி சம்பந்தப்பட்ட விதத்தில் மற்ற உயர்நிலை முதன்மை நற்பண்புகளையும் (நம்பிக்கை, சுயகட்டுப்பாடு, பொறுமை மற்றும் தியாக அன்பின் சில அம்சங்கள்), தாழ்நிலை முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நற்பண்புகளையும் அதிகமாகவோ குறைவாகவோ

அபிவிருத்தி செய்து கொண்டார்கள். ஆனால் இந்த நிலையில் அவர்கள் மனுஷர்களாகக் குணநலன்களை *(graces)* அபிவிருத்தி செய்து கொள்ளவில்லை [நீதி ஆண்டு கொள்வதினால் அபிவிருத்தியடையும் நல்ல பண்புகளை நற்பண்புகளென்றும் *(virtues)*, அன்பு ஆண்டு கொள்வதினால் அபிவிருத்தியடையும் நல்ல பண்புகளைக் குணநலன்களென்றும் *(graces)* நாம் அழைக்கிறோம்.] ஏனென்றால் எல்லா நற்பண்புகளும் இந்த இரு வழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அவைகளை ஆண்டு கொள்ளும் நோக்கம் நீதியாக இருக்கிறதா அல்லது அன்பாக இருக்கிறதா என்பதற்கேற்றவாறு அவைகள் வித்தியாசப்படுகின்றன.

*6.* பாத்திரவான்கள் பிரதிஷ்டை செய்த பிறகும் கூட, மேலே சொல்லப்பட்ட விசுவாசத்திலும் நீதியிலும் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருந்தார்கள். மூப்பரான பாத்திரவான்களிடம் இவ்வித விசுவாசம் மற்றும் நீதியின் ஆவி இருந்ததென்பது, அவர்கள் விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட்ட ஒரு வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்ற உண்மையிலிருந்து மட்டுமல்ல, வேதாகமத்தின் நேரடியான அறிக்கைகளிலிருந்தும் வெளிப்படையாயிருக்கிறது. எடுத்துக்காட்டாகப் பத்சேபாளுடன் செய்த பாவத்திற்கும் உரியாவிற்கெதிராகச் செய்த பாவத்திற்கும் பிறகு, உண்மையாக மனந்திரும்பின பிறகு, அவர் உள்ளத்தில் நீதியான ஒரு மனஇயல்பைப் புதுப்பிக்க வேண்டுமென்று தாவீது கர்த்தரிடம் ஜெபித்தார் *(சங். 51:10 - நிலைவரமான ஆவி – right spirit)*. அவருடைய மற்றும் மற்ற பாத்திரவான்களுடைய நியாயமாக்கப்பட்ட நிலையைக் குறித்துச் சொல்லும்போது, அவர்களுடைய மனஇயல்பில் எவ்வித கபடமும் இல்லையென்று அவர் சொல்கிறார் *(சங். 32:2)*.

*7.* பரிசுத்த பவுல் இவ்வசனத்தையே சுவிசேஷ யுகத்தில் பரீட்சார்த்த ரீதியாக நியாயமாக்கப்பட்டவர்களுக்குப் பொருந்துவதாக ரோம. *4:7,8* வசனங்களில் குறிப்பிடுகிறார். ஆகையால் வாலிபரான பாத்திரவான்களும் தேவனுடைய நீதியான சித்தத்தைச் செய்ய விரும்புகிற நியாயமாக்கப்பட்ட சித்தமுடையவர்களாக இருப்பதால், அவர்களுடைய நியாயமாக்கப்பட்ட மனஇயல்பிலும் எவ்வித கபடமும் இல்லை. அதாவது அவர்களுடைய விழுந்துபோன மாம்சத்தில் பாவங்கள் இருந்தாலும், தேவனுடைய சித்தத்தையே தன் சித்தமாகக் கொள்கிற அவர்களுடைய புது சித்தத்தில் எந்த பாவமும் இல்லை. மூப்பரான பாத்திரவான்கள் எல்லாரும் நீதியை நடப்பித்து, விசுவாசத்தை அப்பியாசித்தார்கள் என்று பரிசுத்த பவுல் சாட்சி கூறுகிறார் *(எபி. 11:1,2,33)*. மேலும் இவ்வசனங்களில் அடங்கியுள்ள அடிப்படை கொள்கை வாலிபரான பாத்திரவான்களுக்கும் பொருந்தும். ஆகையால் மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களின் பரிசுத்த ஆவியின் ஒரு பகுதியாக, தேவனுடைய சித்தத்தைச் செய்ய வேண்டுமென்ற சித்தமாகிய தேவனுடைய மன இயல்பு இருக்கிறது என்பது வேதாகம போதனையாகும். மேலும் அந்த சித்தம் மனுஷீக பற்றுதல்களைக் கையாளுவதின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட குணநலன்களும் அவர்களுடைய பரிசுத்த ஆவியின் ஒரு பகுதியாக இருக்கின்றன.

*8.* மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களிடம் தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவி ஓரளவிற்கு இருந்தது. அவர்கள் பிரதிஷ்டை செய்தபோது தன்னலமற்ற நல்லெண்ணமாகிய தியாக அன்பின் மூலம் அந்த பரிசுத்த ஆவி அபிவிருத்தியடைந்தது. ஏனென்றால் அந்த இரு வகுப்பாரும் நியாயமாகுதலுக்கென்று அதாவது நீதிக்கென்று பிரதிஷ்டை செய்வது மட்டுமல்ல பரிசுத்தமாகுதலுக்கென்றும் பிரதிஷ்டை செய்தார்கள். அதாவது சுயத்திற்கும் உலகத்திற்கும் மரித்து தேவனுக்கென்று பிழைத்திருக்க அவர்கள் தங்களைப் பிரதிஷ்டை செய்தார்கள். பலி செய்யும் அளவிற்கு தேவனுடைய சித்தத்தையே தங்களுடைய சித்தமாக ஏற்றுக் கொண்டார்கள். வேறு வார்த்தைகளில் சொன்னால், பிரதிஷ்டையைப் பொறுத்தவரை, அவர்களும் சிறுமந்தை வகுப்பார் செய்ததைப் போலவே செய்தார்கள். தேவன் அவர்களுடைய பிரதிஷ்டையை ஏற்றுக் கொண்ட விதமானது, சிறுமந்தை வகுப்பாரின் பிரதிஷ்டையை ஏற்றுக் கொண்ட விதத்திலிருந்து வேறுப்பட்டிருந்தாலும், பிரதிஷ்டை செய்த இந்த மூன்று வகுப்பாரைப் பொறுத்தவரை அவர்களுடைய மனநிலை ஒன்றாகவே இருந்தது. அதாவது அவர்கஎல்லாரும் சுயத்திற்கும் உலகத்திற்கும் மரித்து தேவனுக்கென்று பிழைத்தார்கள்.



*9.* தேவன் சிறுமந்தை வகுப்பாரின் பிரதிஷ்டையைப் பாவநிவாரண பலியின் ஒரு பாகமாக ஏற்றுக் கொண்டதால், மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களுக்கு ஏற்படுத்தினதை விட அதிக தீவிரமான சோதனைகளை அவர் சிறுமந்தை வகுப்பாருக்கு ஏற்படுத்தினார். மேலும் சிறுமந்தை வகுப்பார் இந்த வாழ்க்கையிலேயே பூரண அன்பில் படிகப்படுத்தப்பட வேண்டியதாயிருந்தது. ஆனால் மூப்பரான பாத்திரவான்களிடம் தேவன் அதை எதிர்பார்க்கவில்லை. சிம்சோன் மற்றும் தாவீதின் காரியத்தில் இதை நாம் காண்கிறோம். அவர்களுக்கு விரோதமாகத் தீங்கு செய்தவர்களைப் பழிவாங்க வேண்டுமென்று ஜெபித்தார்கள். மேலும் பல மூப்பரான பாத்திரவான்கள் யுத்தத்தில் தங்கள் சத்துருக்களைக் கொலை செய்து கொண்டே மரித்தார்கள். ஆகையால் அவர்களில் பூரண அன்பு படிகப்படுத்தப்படுவதைத் தேவன் கோரவில்லை என்று நாம் காண்கிறோம். வாலிபரான பாத்திரவான்களிடத்திலும் அவர் அதைக் கோரவில்லை.

*10.* இந்த வித்தியாசத்திற்குரிய காரணம் இவ்வாறாயிருக்கிறது: சிறுமந்தை வகுப்பார் (திரள் கூட்டத்தாரும் கூட) ஆவிக்குரிய தளத்தில் ஜீவனை அடைவதற்காகப் பரீட்சிக்கப்பட்டு கொண்டிருந்தார்கள். அந்த தளத்தில் ஜீவனைப் பெற்றுக் கொள்கிற அனைவரும் தியாக அன்பில் படிகப்படுத்தப்பட வேண்டும். ஆனால் மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்கள் இந்த வாழ்க்கையில் ஜீவனுக்காகப் பரீட்சிக்கப்படாதிருந்தார்கள். மாறாக அவர்களுடைய பரீட்சையானது, நியாயமாக்கும் மற்றும் பரிசுத்தமாக்கும் விசுவாசம் மற்றும் நீதி

சம்பந்தப்பட்டதாக இருந்தது. எபி. *11* –ம் அதிகாரம் இதை உறுதியாக நிரூபிக்கிறது *(எபி. 11:1,2).* இந்த காரியங்களில் விசுவாச உண்மைத்துவத்தைக் காத்துக் கொள்ள தவறினவர்கள் பாத்திரவான்களாக இருக்கும் தகுதியைப் பெற்றுக் கொள்ளத் தவறினார்கள்.

*11.* அப்படியானால் பாத்திரவான்கள் தியாக அன்பை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டாமென்று இது அர்த்தப்படுத்துகிறதா? நிச்சயமாக இல்லை! அவர்கள் இந்த வாழ்க்கையில் ஜீவனுக்கான இறுதியான பரீட்சையிலோ தியாக அன்புக்கான பரீட்சையிலோ இல்லையென்றாலும், மரண பரியந்தம் பிரதிஷ்டை செய்திருந்தார்கள். அதை அவர்கள் எப்பொழுதுமே நிறைவேற்ற வேண்டியதாயிருந்தது. அதில் அவர்கள் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருப்பதற்குத் தியாக அன்பை அபிவிருத்தி செய்து கொள்வது அவசியமானதாகும். ஏனென்றால் சாத்தானும் பாவமும் மேலோங் கியிருக்கும் இக்காலத்தில், தியாக அன்பில்லாமல் பிரதிஷ்டையைக் காத்துக் கொள்ள முடியாது. சாத்தான் ஆதிக்கத்திலிருக்கும் வரை, சுயத்திற்கும் உலகத்திற்கும் மரித்து, தேவனுக்கென்று பிழைத்திராமல், அதாவது தியாக அன்பில்லாமல் பிரதிஷ்டையில் விசுவாச உண்மைத்துவத்தைக் காத்துக் கொள்வது அசாத்தியமான காரியமாகும். பாத்திரவான்கள் எல்லோரும் பலியின் உடன்படிக்கையைச் செய்தார்கள். ஆகையால் தேவன் அவருடைய ஆவி, வார்த்தை மற்றும் பரிபாலனத்தின் மூலம் அவர்களிடம் எந்தளவிற்கு விசுவாச உண்மைத்துவத்தைக் கோருகிறாரோ, அந்தளவிற்கு அவர்கள் அதில் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

*12.* அப்படியானால் அவர்கள் இந்த வாழ்க்கையிலேயே ஏன் தியாக அன்பில் படிகசப்படுத்தப்படுவதில்லை? நாங்கள் இவ்வாறு பதிலளிக்கிறோம்: அவர்களில் தியாக அன்பை படிகசப்படுத்துவதற்குத் தேவையான, பரிசுத்த ஆவியின் அப்பியாசித்தலையும், தேவ வார்த்தைக்கு உண்மைத்துவத்தையும் கோரும் தீவிரமான அனுபவங்களுக்குள் தெய்வீக பரிபாலனம் அவர்களை வைக்காது. இவ்வாறாகத் தேவன், கிறிஸ்து, சகோதரர்கள், உலகத்தார் மற்றும் சத்துருக்கள் ஆகியவர்களிடத்தில் தியாக அன்பின் ஓரளவான அபிவிருத்தியைத் தேவன் அவர்களுக்குக் கொடுப்பார், ஏனென்றால் அந்தளவான அபிவிருத்தி பிரதிஷ்டையில் விசுவாச உண்மைத்துவத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும். இருந்தாலும் தேவன் அவர்களைத் தியாக அன்பின் படிகசப்படுதலின் உச்ச நிலைக்குக் கொண்டு வர மாட்டார். அவ்வித படிகசப்படுதலுக்குத் தேவையான பரீட்சைகளை அவர்களுக்குக் கொடுக்க மாட்டார். வேறு வார்த்தைகளில் சொன்னால், அவர்களுடைய பிரதிஷ்டையின் அனுபவங்கள் சகலத்தையும் உள்ளடக்கிய முழுமையான மற்றும் முடிவான அனுபவங்களாக இல்லையென்றாலும், அவர்கள் அவர்களுடைய நியாயமாகுதல் மற்றும் பிரதிஷ்டை அனுபவங்களின் மத்தியில் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்க வேண்டியதாயிருந்தது. அவர்களுடைய வாழ்கைகளுக்குள் தேவன் எந்த அனுபவங்களைக் கொண்டு வந்தாலும், நியாயமாக்கும் மற்றும் பிரதிஷ்டை செய்யும் விசுவாசத்திற்கும், நீதிக்கும் அவர்கள் மரண பரியந்தமும் உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதற்குக் கூடுதலாக அவர்கள் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று தேவனுடைய பரிபாலனங்கள் கோருமளவிற்கு அவர்கள் தியாக அன்பையும் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும். இவைகளெல்லாம் சேர்ந்து, அவர்களில் தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவியை, இந்த வாழ்க்கையிலேயே அதிகளவிற்கு அபிவிருத்தி செய்தன.

## இது சம்பந்தமாக வேதாகம நிரூபணம்

*13.* அவர்களுடைய பிரதிஷ்டையின் ஆவியின் பண்பு மட்டுமல்ல, வேத வசனங்களும் மூப்பரான பாத்திரவான்களில் தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவி குறிப்பிடத்தக்க அளவிலிருந்தது என்று போதிக்கின்றன. ஆகையால் வாலிபரான பாத்திரவான்கள் சம்பந்தமாகவும் அதை அர்த்தப்படுத்துகின்றன. தன்னுள்ளத்திலே நிலைவரமான ஆவியை புதுப்பிக்க வேண்டுமென்று தாவீது ஜெபிப்பது மட்டுமல்ல, தேவனுடைய சமுகத்தைவிட்டு அவரைத் தள்ளாமலும், தேவனுடைய பரிசுத்த ஆவியை அவரிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இருக்க வேண்டுமென்றும் அவர் மன்றாடுவதும் இதை நிரூபிக்கின்றன *(சங்.51:10,11).* மேலும் வச. *12*-ல் அவர் இந்த வேண்டுகோளை விரிவாக்கி, தேவனுடைய மன இயல்பின் ஒரு பகுதியாகிய அவருடைய இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்ப அளிக்க வேண்டுமென்றும், தேவனுடைய மன இயல்பின் மற்றொரு பகுதியாகிய உற்சாகமான ஆவி (மன இயல்பு) அவரைத் தாங்கும்படி செய்ய வேண்டுமென்றும் மன்றாடுகிறார். மேலும் மூப்பரான பாத்திரவான்கள் தேவனுடைய சீர்திருத்தங்களுக்குக் கீழ்ப்படிந்தால், அவர் அவருடைய ஆவியை அவர்களுக்கு அருளுவதாகவும், அவருடைய வார்த்தையை அவர்களுக்குத் தெரிவிப்பதாகவும் தேவன் தெளிவாகக் கூறுகிறார் *(நீதி.1:23).* வாலிபரான பாத்திரவான்களுக்கும் இது உண்மையாயிருக்கிறது.

*14.* இவ்வாறாக அவர்களுடைய பிரதிஷ்டையின் ஆவியின் பண்பும், தெளிவான வேத வசனங்களும் தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவி ஓரளவிற்கு அவர்களிலிருந்தது என்பதை நிரூபிக்கின்றன. ஆனால் அவர்கள் புது சிருஷ்டிகளாக அல்லாமல், மனுஷர்களாக அதைப் பெற்றுக் கொண்டார்கள். இவ்வாறாக அவர்களுடைய நியாயமாக்கப்பட்ட மற்றும் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஜீவியங்களில் நீதியின் அடிப்படையில் உருவாகும் மூன்று வகையான (முதன்மையான, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை) நற்பண்புகள் *(virtues)* இருப்பது மட்டுமல்ல, குண நலன்களும் *(graces)* குறிப்பிடத்தக்களவில் அவர்களிலிருந்தன. அதாவது அவர்களில் உயர்நிலை மற்றும் தாழ்நிலை முதன்மை குணநலன்களும், இரண்டாம் நிலை குணநலன்களும் மற்றும் மூன்றாம் நிலை குணநலன்களும் இருந்தன. ஆனால் உயர்நிலை முதன்மை குணநலன்களாக இல்லாதவைகள் முழுமையாகச் சமச்சீர்ப்படுத்தப்படாமலும், தியாக அன்பில் படிகசப்படுத்தப்படாமலும் இருந்தன.

*15.* ஆகையால் மனுஷர்களாக அவர்கள் தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவியின் மூன்று உட்கூறுகளில் அதைப் பெற்றுக் கொண்டார்கள். அந்த உட்கூறுகளாவன: *(1)* புதிய சித்தம் - நியாயமாகுதலிலும் பரிசுத்தமாகுதலிலும் தேவனுடைய சித்தத்தை தன்னுடைய சித்தமாகக் கொள்கிற புதிய சித்தம்: *(2)* சுத்திகரிக்கப்பட்ட மனுஷீக பற்றுதல்கள் - மனுஷீக மேல்நோக்கு ஆசைகளின் உயர்வான மற்றும்

மேன்மையான காரியங்களைப் பற்றிக்கொள்ளும் திறமைகளுடைய சுத்திகரிக்கப்பட்ட மனுஷீக பற்றுதல்கள்: மற்றும் (3) நற்பண்புகள் (virtues) மற்றும் குணநலன்கள் (graces) - நியாயமாகுதலிலும் பிரதிஷ்டையிலும் தேவனுடைய சித்தத்தைத் தன்னுடைய சித்தமாகக் கொள்கிற புது சித்தமானது அவர்களுடைய சுத்திகரிக்கப்பட்ட மனுஷீக பற்றுதல்களைக் கையாளுவதின் மூலம் அவர்களில் அபிவிருத்தி செய்கிற நற்பண்புகள் மற்றும் குணநலன்கள்.

*16.* இந்த மூன்று காரியங்கள் சபை வகுப்பாரிலுள்ள தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவியின் மூன்று உட்கூறுகளுக்கு மிகவும் ஒத்தவைகளாக இருக்கின்றன. சபை வகுப்பாரின் பரிசுத்த ஆவியின் மூன்று உட்கூறுகள் ஆவிக்குரிய தளத்தில் தேவனுடைய சாயலில் புதிதாக்கப்படுகின்றன. மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களில் அவைகள் மனுஷீக தளத்தில் தேவனுடைய சாயலில் புதிதாக்கப்படுகின்றன. இந்த வகுப்பார்கள் அவர்களுக்குரிய இருத்தலின் தளம் சம்பந்தமாக வேறுப்பட்டிருந்தாலும், இந்த மூன்று வகுப்பார்களிலும் தேவ சாயல் ஒரே விதமான கொள்கைகளுக்கு இணக்கமாகப் புதிதாக்கப்படுகிறது. பரிசுத்தவான்களிலுள்ள பரிசுத்தாவியை ஆராயும் போது நாம் இந்த கொள்கைகளை விரிவாக ஆராய்ந்ததால், அவைகளை இங்கே திரும்பக் குறிப்பிடுவது அவசியமில்லை.

## மில்லினிய யுகத்தில் பாத்திரவான்களிலுள்ள பரிசுத்த ஆவி

*17.* இம்மைக்குரிய வாழ்க்கையில் பாத்திரவான்களிலுள்ள தேவனுடைய மனஇயல்பாகிய பரிசுத்த ஆவியைக் குறித்து போதுமான அளவிற்கு ஆராய்ந்த பிறகு, மில்லினிய யுகத்தில் அவர்களுக்கிருக்கும் பரிசுத்த ஆவியைக் குறித்து இப்போது பார்ப்போம். மில்லினிய யுக பாத்திரவான்களிலுள்ள தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவியைக் குறித்துச் சொல்லும் தெளிவான வசனம் யோயே. 2:28 ஆகும். அப். 2:17-ம் வசனத்தில் பேதுரு அப்போஸ்தலர் இவ்வசனத்தையே எடுத்துரைக்கிறார். ஆனால் அப்போது மில்லினிய யுகம் தொடங்கினது என்று நிரூபிக்க அவர் இவ்வசனத்தைக் குறிப்பிடவில்லை. மேலும் அப்போது இவ்வசனத்தின் எல்லா பகுதிகளும் நிறைவேற்றப்படத் தொடங்கவும் இல்லை. மாறாக இவ்வசனம் பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதைக் குறிப்பிடும் வேத பகுதியின் ஒரு பாகமாக இருப்பதால் பேதுரு அதை அங்கே குறிப்பிட்டார். ஏனென்றால் யூதர்கள் அப்போது கண்ட நிகழ்வானது, அவர்களில் சிலர் சொல்வதைப் போல் மதுபானத்தினால் நிறைந்திருப்பதால் உண்டான ஒரு காட்சியாக அல்லாமல், தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் ஊற்றப்படுதலாயிருந்ததென்று நிரூபிப்பதற்கு அவர் இவ்வசனத்தை எடுத்துரைத்தார்.

*18.* நாம் ஏற்கனவே பார்த்ததைப் போல் யோயே. 1: 2-20 வரையுள்ள வசனங்கள் சுவிசேஷ யுகத்தின் ஆரம்பத்திலிருந்து அதின் அறுவடையின் காலம் வரை அந்த யுகத்தைக் குறிப்பிடுகின்றன. யோயே. 2:1-27 வசனங்கள் சுவிசேஷ யுகத்தின் முடிவைக் குறிப்பிடுகின்றன. அதில் 1-14 வரையுள்ள வசனங்கள் உபத்திரவமென்னும் அம்சத்தில் உலகத்தாரையும், 15-27 வரையுள்ள வசனங்கள் அறுவடை சிலாக்கியங்கள் என்ற அம்சத்தில் கர்த்தருடைய ஜனங்களையும் குறிப்பிடுகின்றன. அதற்குப் பிறகு 28-ம் வசனமானது சுவிசேஷ யுக காரியங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு "அதற்குப் பின்பு" வரும் மில்லினிய யுகத்திற்குரிய காரியங்களைக் குறித்துச் சொல்கிறது. 29-ம் வசனமானது சுவிசேஷ யுகம் முழுவதும், "அந்நாட்களிலே", யோயே. 1:2-2:27 வரையுள்ள வசனங்களில் சொல்லப்பட்ட நாட்களிலே தேவன் அவருடைய ஜனங்களுக்குச் செய்யும் காரியங்களைக் குறித்துச் சொல்கிறது.

*19.* சுவிசேஷ யுகத்திற்குப் பிறகு "அதற்குப் பின்பு" நிகழ்வதாக நான்கு காரியங்கள் குறிப்பிடப் படுகின்றன: (1) மாம்சமான யாவருக்காகவும் பரிசுத்த ஆவி ஊற்றப்படுவது;(2) கிறிஸ்து வகுப்பாரின் குமாரர்களும் (விசுவாசிக்கிற இஸ்ரயேலர்கள் மற்றும் விசுவாச உண்மைத்துவமுள்ள விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட்டவர்கள்) குமாரத்திகளும் (வழி விலகிப் போன இஸ்ரயேலர்கள், விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட்ட பின்பு வழி விலகிப் போனவர்கள் மற்றும் புறஜாதியார்கள்) சத்தியத்தை அறிவிப்பார்கள்; (3) " உங்கள் மூப்பராகிய" மூப்பரான பாத்திரவான்கள் தெய்வீக அகத்தூண்டுதலினால் மில்லினிய யுகத்திற்குரிய ஆழமான சத்தியங்களைக் கொடுப்பார்கள்: "உங்கள் வாலிபராகிய" வாலிபரான பாத்திரவான்கள் தெய்வீக அகத்தூண்டுதலினால் மில்லினிய யுகத்திற்குரிய குறைந்த ஆழமுடைய சத்தியங்களைக் கொடுப்பார்கள்.

*20.* இவ்வாறாக இந்த நான்கு காரியங்களில் மூப்பரான பாத்திரவான்களுக்கு இரண்டு காரியங்களும் வாலிபரான பாத்திரவான்களுக்கு இரண்டு காரியங்களும் கொடுக்கப்படுகின்றன. பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதென்ற ஒரு காரியம் இரு வகுப்பார்களுக்கும் கொடுக்கப்படுகிறது. ஆனால் மற்றொரு காரியம் இரு வகுப்பாரிலும் வேறுபட்டிருக்கிறது. ஒரு வகுப்பாருக்குத் தெய்வீக அகத்தூண்டுதலினால் ஆழமான சத்தியங்களைப் போதிக்கும் ஊழியமும், மற்றொரு வகுப்பாருக்குக் குறைந்த ஆழமுடைய சத்தியங்களைப் போதிக்கும் ஊழியமும் கொடுக்கப்படும். ஏனென்றால் மில்லினிய யுகத்தில் மூப்பரான பாத்திரவான்களுக்கு வாலிபரான பாத்திரவான்களைவிட உயர்வான ஊழியம் அளிக்கப்படும். அவர்கள் தெய்வீக அகத்தூண்டுதலினால் வெளிப்பாடுகளைக் கொடுக்கும் ஊழியத்தைச் செய்வார்கள் என்பதும் அவர்கள் மில்லினிய யுக நிஜ நிறைவேறுதலான லேவியர்களின் மிக உயர்வான வகுப்பாகிய நிஜ நிறைவேறுதலான கோகாத்தியர்களாக இருப்பார்கள் என்பதும் இதை நிரூபிக்கின்றன. வாலிபரான பாத்திரவான்கள் மில்லினிய யுக நிஜ நிறைவேறுதலான லேவியர்களின் கீழ்நிலை வகுப்பாகிய நிஜ நிறைவேறுதலான கெர்சோனியர்களாக இருப்பார்கள். மில்லினிய யுகத்தில் புது உடன்படிக்கையின் வெளிப்பாடுகள் என்னும் மற்றொரு பகுதி வேதாகமத்தோடு கூட்டப்படும் (வெளி. 20:12). அந்த பகுதியில் யோயே. 2:28ம் வசனத்தில் சொல்லப்பட்ட சொப்பனங்களும் தரிசனங்களும் இருக்கும். ஆனால் இந்த கட்டுரையில் நாம் அவைகளைக் குறித்து விசேஷமாக ஆராயப்போவ தில்லை. அதற்கொத்த மற்றொரு மில்லினிய யுக ஆசீர்வாதமாகிய பரிசுத்த ஆவியின் வரத்தைக் குறித்து நாம் இங்கே ஆராய்வோம்.

*21.* பாத்திரவான்களின் இரு வகுப்பார்களும் "மேன்மையான உயிர்த்தெழுதலில்" பங்கு கொள்வார்கள் (எபி.11:35). அவர்களுடைய உயிர்த்தெழுதல் ஜீவனுக்கான உயிர்த்தெழுதலில் மூன்றாம் வகையான

தாக இருக்கும் (யோவா. 5:29). சிறுமந்தை வகுப்பார் ஜீவனுக்கான உயிர்த்தெழுதலில் முதல் வகையான ஒன்றாகத் தெய்வீக தளத்தில் உயிர்த்தெழுவார்கள். திரள் கூட்டத்தார் இரண்டாம் வகையான ஜீவனுக்கான உயிர்த் தெழுதலாகத் தெய்வீக தளத்திற்குக் கீழான ஆவிக்குரிய தளத்தில் உயிர்த்தெழுவார்கள். பாத்திரவான்கள் இந்த வாழ்க்கையில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாமல், மனு ஷர்களாக அபிவிருத்தி செய்யப்பட்டதால், அவர்கள் மில்லினிய யுகத்தின் ஆரம்ப காலத்திலே சரீர ரீதியான, மன ரீதியான, ஒழுக்க ரீதியான, கலை சார்ந்த மற்றும் மத ரீதியான திறமைகளில் பூரண மனுஷர்களாகவும், பூமியின் மேல் பிரபுக்களாகவும் இருப்பார்கள். இதுவே அவர் களுக்குக் கிடைக்கும் "மேன்மையான உயிர்த்தெழுத லாகும்". அவர்கள் உலகத்தாரை விட கிட்டத்தட்ட ஆயிர வருடங்களுக்கு முன்பே திறமைகளின் பூரணத்துவத்தை யும் பிரபுக்களாக இருக்கும் தகுதியையும் பெற்றுக் கொள்வதால் அவர்களுடைய உயிர்த்தெழுதல் மேன்மை யான உயிர்த்தெழுதலென்று அழைக்கப்படுகிறது. பொது மனுகுலம் மில்லினிய யுகத்தின் முடிவில் பூரணத்துவத் தையும் பிரபுக்களாக இருக்கும் தகுதியையும் பெற்றுக் கொள்வார்கள் (வெளி. 20:5; சங். 107:40). பாத்திர வான்கள் கல்லறையிலிருந்து எழுந்து வரும்போது "ஜீவனுக்கான உயிர்த்தெழுதலில்" பங்கு கொள்வார் களென்பது (யோவா.5:29) அவர்கள் திறமைகளில் பூரணர் களாக இருப்பார்கள் என்பதை நிரூபிக்கிறது. ஏனென் றால் மனுஷீக தளத்தில் உயிர்த்தெழுதல் என்பது இழந் ததைத் திரும்பக் கொடுத்தலை, ஆதாமுக்கிருந்த பூரண நிலையை அடைவதை அர்த்தப்படுத்தும். ஆனால் இது குணாம்ச பூரணத்துவத்தை அல்லாமல் உறுப்புகளின் திறமைகளின் பூரணத்துவத்தை அர்த்தப்படுத்தும். ஏனென்றால் ஆதாம் திறமைகளில் பூரணராக இருந் தாலும், பூரண குணாம்சத்தை அபிவிருத்தி செய்து கொள்ளாதிருந்தார். இருந்தாலும் ஆதாம் அபிவிருத்தி செய்யப்படாத பூரண மனுஷீக மன இயல்புடைய வராயிருந்தார். மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திர வான்கள் இந்த வாழ்க்கையில் பூரண சித்தங்களை, அதா வது மனுஷீக நீதியின் நோக்கங்களின் பூரணத்துவத்தை அபிவிருத்தி செய்து கொண்டதால், அவர்களும் பூரண மனுஷீக இயல்பை அபிவிருத்தி செய்து கொண்டார்கள்.

*22.* ஆனால் அவர்கள் பூரணமாக அபிவிருத்தி யடைந்த குணாம்சமுடையவர்களாக இருக்க மாட்டார் களென்பது பின்வரும் இரண்டு உண்மைகளிலிருந்து வெளிப்படையாக இருக்கிறது: (1) அவர்கள் இந்த வாழ்க் கையில் ஜீவனுக்கான பரீட்சையைப் பெற்றுக் கொள்ள வில்லை, ஆகையால் பூரண குணாம்சங்களை அபிவிருத்தி செய்து கொள்ளவில்லை; (2) கிறிஸ்து வகுப்பாரின் மில்லினிய யுகத்தின் ஊழியத்தின் மூலம் தான், பாத்திர வான்கள் ஜீவனுக்கான பரீட்சையைப் பெற்றுக் கொண்டு, குணாம்சத்தில் பூரணப்படுத்தப்படுவார்கள். "அவர்கள் நம்மை அல்லாமல் (அவர்களுக்காகக் கிறிஸ்து வகுப்பார் செய்யும் மில்லினிய ஊழியமில்லாமல்) பூரணமாகுவதில்லை" (எபி. 11:40). அவர்கள் குணாம்ச பூரணத்துவத்தை அடையாமல் மரித்ததினாலும், கல்லறை யில் எவ்வித மாற்றமும் இல்லாதிருப்பதினாலும் (பிர. 11:3); அவர்கள் கல்லறையிலிருந்து பூரண திறமைகளுடன் வந்த பிறகுதான் அவர்களுடைய குணாம்சங்கள் பூரணப் படுத்தப்படக் கூடும்.

## பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தில் அவர்களுக்குரிய பங்கு

*23.* "அதற்குப் பின்பு," அதாவது மில்லினிய யுகத்தில் அவர்களுடைய மனரீதியான, கலை சார்ந்த, ஒழுக்க ரீதியான மற்றும் மத ரீதியான திறமை களின் மேல் பரிசுத்த ஆவி ஊற்றப்படும். ஆரம்ப காலத்தில் இது எதை அர்த்தப்படுத்தும் என்பதைப் புரிந்து கொள்வதற்கு நாம் பின்வரும் காரியத்தை மனதில் கொள்ள வேண்டும்: இந்த வாழ்க்கையில் அவர்கள் (1) நற்பண்புகளை (virtues) அதிகளவில் அபிவிருத்தி செய்து கொண்டார்கள், (2) குணநலன்களைக் (graces) குறிப்பிடத் தக்க அளவிற்கு அபிவிருத்தி செய்து கொண்டார்கள், (3) ஓரளவிற்குப் பூரணமான மனுஷீக சித்தத்தை, அதா வது நோக்கங்களை அபிவிருத்தி செய்து கொண்டார்கள், (4) பற்றுதல்களை அதிகமாகவோ குறைவாகவோ சுத்தி கரித்துக் கொண்டார்கள், (5) மனரீதியான மற்றும் கலை சார்ந்த திறன்களை அதிகமாகவோ, குறைவாகவோ அபிவிருத்தி செய்து கொண்டார்கள். இவ்வாறு அவர்கள் இந்த வாழ்க்கையில் அபிவிருத்தி செய்து கொண்ட பரிசுத்த ஆவியின் அளவுக்கு மேலாக, மில்லினிய யுகத் தில் இந்த காரியங்களின் மேல் இன்னும் அதிகளவில் பரிசுத்த ஆவி ஊற்றப்படும். பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட வுடனே இந்த அதிகளவான பரிசுத்த ஆவி உடனடியாகச் செயல்படத் தொடங்கும். ஏனென்றால் அது பூரண திறமைகளின் மேல் ஊற்றப்படும். இந்த பூரண திறமை களினாலும், அந்தத் திறமைகளுக்குத் தேவ வார்த்தை அளிக்கும் பிரகாசிப்பித்தல் மற்றும் ஊக்குவித்தலி னாலும், அந்த பூரண திறமைகள் உடனடியாகச் சித்தத் திலும், நற்பண்புகளிலும், குணநலன்களிலும், பற்றுதல் களிலும் விரிவாக்கப்படும். ஏனென்றால் இந்த வாழ்க்கை யில் அவர்களுக்கிருந்த விழுந்துபோன திறமைகளைக் காட்டிலும், அவர்களுடைய பூரண திறமைகள் இந்த அம்சங்களில் விரிவாக்கப்படுவதற்கு அதிக வல்லமை உடையவைகளாக இருக்கும்.

*24.* இவ்வாறாகப் பாத்திரவான்கள் இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பாரை காட்டிலும் மிக விரை வாகப் பூரண மன இயல்புகளையும், விரைவாகப் பூரண மனுஷீக குணாம்சங்களையும் அடைவார்கள். ஏனென் றால் இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பார் திறமை களில் பூரணப்படுத்தப்படுவதற்கு 1000 வருடங்கள் தேவைப்படும். இவ்வாறாக மூப்பரான மற்றும் வாலிப ரான பாத்திரவான்கள் மிக விரைவாக (1) புது சித்தத்தை பூரணமாக அபிவிருத்தி செய்து கொள்வார்கள், (2) தங்களுடைய பற்றுதல்களைச் சுத்திகரித்துக் கொள் வார்கள், (3) பூரண நற்பண்புகளை அபிவிருத்தி செய்து கொள்வார்கள், (4) இந்த வாழ்க்கையில் அபிவிருத்தி செய்து கொண்டதை விட மிக அதிகளவில் தியாக அன்பையும் அதின் குண நலன்களையும் அபிவிருத்தி செய்து கொள்வார்கள்.

*25.* பின்வரும் காரியங்களின் மூலம் இது நிறை வேற்றப்படும்: (1) தேவ வார்த்தை மிகப்பெரியளவில் அவர்களில் வாசம் பண்ணும், (2) அவர்களுக்கு அநேக அனுகூலமான பரிபாலனங்கள் அளிக்கப்படும், (3) சாத் தானாலும் உலகத்தினாலும் வரும் சோதனைகள் இருப் பதில்லை. ஆகையால் 1000 வருடங்கள் முடிவதற்கு நீண்டகாலத்திற்கு முன்பே அவர்கள் பூரண சித்தங்கள், பற்றுதல்கள், நற்பண்புகள் மற்றும் மனுஷீக குணநலன் களுடைய பூரண மனுஷீக குணாம்சத்தை அபிவிருத்தி

செய்து கொள்வார்கள். ஆனால் இந்த குணநலன்கள் புது சிருஷ்டிகளின் குணநலன்களாக இருப்பதில்லை. ஏனென்றால் புது சிருஷ்டியின் குணநலன்களை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு மரண பரியந்தம் ஜீவனைப் பலி செய்வது அவசியமானதாகும். ஆனால் மில்லினிய யுகத்தில் ஜீவனைப் பலி செய்வதற்குச் சந்தர்ப்பங்கள் இருக்காது. அவ்வாறு பலி செய்வது சாத்தியமல்ல. ஆகையால் அந்தளவான குணநலன்கள் அப்பியாசிக்கப்படாததால் அவைகள் அந்த நிலைக்கு அபிவிருத்தி அடைவதில்லை.

*26.* இருந்தாலும் மேலே சொல்லப்பட்டதைப் போல் அவர்களில் பரிசுத்த ஆவி அபிவிருத்தியடைவதால், அவர்கள் பாவமே செய்ய மாட்டார்களென்று நாம் புரிந்து கொள்ளக் கூடாது. ஏனென்றால் அடையாளத்தில் ஒரு பிரபு பாவத்திற்குட்பட்டுக் குற்றவாளியானால், அவன் ஒரு வெள்ளாட்டுக் கடாவை பாவ நிவாரண பலியாகக் கொண்டு வர வேண்டியதாயிருந்தது *(லேவி. 4: 22-26)*. பாத்திரவான்கள் மில்லினிய யுகத்தில் குறிப்பாக அதின் ஆரம்ப காலத்தில் அதிகமாகவோ குறைவாகவோ பாவம் செய்வார்கள் என்பதையும், மன்னிப்பைப் பெறுவதற்காகக் கிறிஸ்துவின் பாவ நிவாரண பலியின் புண்ணியத்தைத் தங்களுக்கென்று பயன்படுத்திக்கொள்வார்கள் என்பதையும் இது அடையாளப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக சிம்சோன் மற்றும் தாவீது, மரிக்கும் நேரத்தில் அவர்கள் வெளிப்படுத்தின குணாம்சங்கள் குறித்துச் சிந்திக்கும்போது, அவர்கள் மில்லினிய யுகத்தில் சில நேரங்களில் பாவஞ் செய்யக் கூடுமென்பதில் சந்தேகமில்லை. மேலும் அவர்கள் கருதப்பட்ட நிலையிலும் கூட பூரண குணாம்சமுடையவர்களாக இருக்க மாட்டார்கள் என்பது, பாவத்திற்குட்பட்டுக் குற்றவாளியான பிரபு, பாவ நிவாரண பலியாகக் காளையைக் கொண்டு வரவில்லை என்பதின் மூலம் நிரூபிக்கப்படுகிறது. சுவிசேஷ யுகத்தில் பாவஞ் செய்த நிஜ நிறைவேறுதலான ஆசாரியர்கள், கருதப்பட்ட நிலையில் பூரண குணாம்சமுடையவர்களாக இருந்தார்கள். ஆகையால் அவர்களை அடையாளப்படுத்தும், குற்றத்திற்குட்பட்டுப் பாவஞ் செய்த அடையாளமான ஆசாரியனானவன், காளையைத் தன் பாவ நிவாரண பலியாகக் கொண்டு வந்தான் *(லேவி 4:3-12)*.

## சொற்ப காலத்தில் பாத்திரவான்களிலுள்ள பரிசுத்த ஆவி

*27.* பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வது சம்பந்தமாக ஒரு மூன்றாம் கண்ணோட்டத்திலிருந்து நாம் அதைக் கருத்தில் கொள்ள வேண்டும். இம்மைக்குரிய வாழ்க்கையில் அவர்களுக்கிருந்த பரிசுத்த ஆவியை முதலாம் கண்ணோட்டமாகவும், மில்லினிய யுகத்தில் அவர்களுக்கிருக்கப் போகிற பரிசுத்த ஆவியை இரண்டாம் கண்ணோட்டமாகவும் கருத்தில் கொண்டோம். சொற்ப காலத்தில் அவர்கள் பூரண மனுஷர்களாக எந்தவித குறைவுமில்லாமல் பரிசுத்த ஆவியை உடையவர்களாக இருப்பார்கள். கர்த்தராகிய யெஷுஆ ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்குச் சற்று முன்பு இருந்த நிலையில் அவர்கள் இருப்பார்கள். அதற்குப் பிறகு யெஷுஆ, யோர்தானில் தெய்வீகத் தன்மைக்கென்று ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதைப் போலவே, சொற்ப காலத்தின் ஆரம்பத்தில் பாத்திரவான்களும் தெய்வீக தன்மைக்குக் கீழான ஒரு ஆவிக்குரிய தன்மைக்கென்று ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவார்கள் (இதுவே மூன்றாம் கண்ணோட்டத்தில் அவர்களிலுள்ள பரிசுத்த ஆவியாகும்). அந்த தன்மை என்னவாக இருக்குமென்று நாம் அறியோம். ஆனால் அவர்கள் சொற்ப காலத்தில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவார்கள் என்பது பின்வரும் உண்மையிலிருந்து வெளிப்படையாயிருக்கிறது: மில்லினிய யுகத்தில் அவர்கள் மனுஷர்களாக மட்டுமே இருக்கிறார்கள், ஆனால் சொற்ப காலத்தின் முடிவில் அவர்கள் ஆவிக்குரிய தளத்தில் ஜீவனை அடைய வேண்டியதாயிருக்கிறது. அதற்காக அவர்கள் சொற்ப காலத்தில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட வேண்டும்.

*28.* அவர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதினால் என்ன விளைவு உண்டாகுமென்பதை நாம் யெஷுஆவும் சபை வகுப்பாரும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதினால் உண்டான விளைவுகளிலிருந்து அனுமானிக்கக்கூடும். கர்த்தராகிய யெஷுஆ ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட போது, பின்வரும் விளைவுகள் ஏற்பட்டன என்று நாம் ஏற்கனவே பார்த்தோம்: *(1)* அவர் உடனடியாகப் பூரண அன்பின் இலக்கை அடைந்தார், *(2)* அவருடைய பூரண மனுஷீக நற்பண்புகளும் குணநலன்களும் உடனடியாகப் பூரண ஆவிக்குரிய குணநலன்களாக ஆக்கப்பட்டன, *(3)* ஆவியின் ஜெநிப்பித்தலின் மூலம் அவருடைய மனுஷீக சித்தம் புதிய ஆவிக்குரிய சித்தமாக ஆக்கப்பட்டது, *(4)* அவருடைய மூளையின் ஒவ்வொரு திறமைக்கும் ஆவிக்குரிய திறமை அளிக்கப்பட்டது, *(5)* மேலும் அந்த மூளை உறுப்புகள் முற்காலத்தில் எந்த மானிட காரியங்களை பற்றிக் கொண்டிருந்தனவோ, அந்த காரியங்களுக்கொத்த ஆவிக்குரிய காரியங்களை, ஆவிக்குரிய நோக்கங்களினாலும், ஆவிக்குரிய விதத்திலும் பற்றிக் கொள்ளும் திறன் அவைகளுக்கு அளிக்கப்பட்டது.

## பாத்திரவான்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதினால் உண்டாகும் விளைவுகள்

*29.* பாத்திரவான்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும் போதும் மேலே சொல்லப்பட்ட விளைவுகளுக்கொத்தவைகள் அவர்களில் உண்டாக்கும்: *(1)* முற்காலத்தில் மானிட சித்தங்களாகப் பூரணமாக அர்ப்பணிக்கப்பட்டிருந்த அவர்களுடைய பிரதிஷ்டை செய்யப்பட்ட சித்தங்கள், அந்த ஜெநிப்பித்தலின் மூலம், ஆவிக்குரிய சித்தங்களாக ஆக்கப்படும், அதாவது ஆவிக்குரிய நோக்கங்களினாலும், ஆவிக்குரிய விதத்திலும் சகலத்திலும் தேவனுடைய சித்தத்தைத் தன்னுடைய சித்தமாக முழுமையாக ஏற்றுக் கொள்ளும். *(2)* ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கு முன்பு அவர்களுடைய மூளை உறுப்புகளின், செயல்படும் திறனும், பற்றிக் கொள்ளும் திறனும், பூமிக்குரிய காரியங்களுக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்தன. ஆனால் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு, அவைகள் இதுவரை பற்றிக் கொண்ட பூமிக்குரிய காரியங்களுக்கொத்த ஆவிக்குரிய காரியங்களை, ஆவிக்குரிய நோக்கங்களினாலும் ஆவிக்குரிய விதத்திலும் பற்றிக் கொள்ளும் திறன் அவைகளுக்கு அந்த ஜெநிப்பித்தலின் மூலம் அளிக்கப்படும்.

*30.* *(3)* அவர்கள் உடனடியாகப் பூரண அன்பின் இலக்கை அடைவதற்கு கூடுதலாக, அவர்களுடைய ஆவிக்குரிய சித்தங்கள், அவர்களுடைய மூளை உறுப்புகள் ஒவ்வொன்றிற்கும் ஜெநிப்பித்தலினால் அளிக்கப்

பட்ட ஆவிக்குரிய வல்லமையை பற்றிக் கொண்டு அவைகளைக் கையாளும். அதன் மூலம் அவர்களுடைய மூளை உறுப்புகளின் ஒவ்வொரு வல்லமையும், அதற்குரிய ஆவிக்குரிய இலக்கைத் தொடர்ந்து பற்றிக் கொள்ளும் படி செய்யும். இவ்வாறாகப் புதிய ஆவிக்குரிய சித்தம் ஒவ்வொரு வல்லமையையும் அப்பியாசிக்கச் செய்வதின் மூலம், அந்த உறுப்புக்குரிய ஆவிக்குரிய நற்பண்பையும் குணநலத்தையும் அபிவிருத்தி செய்யும். இவ்வாறாக அது உயர்நிலை மற்றும் தாழ்நிலை முதன்மை நற்பண்புகள் மற்றும் குணநலன்கள் எல்லாவற்றையும் அபிவிருத்தி செய்யும். *(4)* அந்த புதிய ஆவிக்குரிய சித்தமானது, அவர்களுடைய தாழ்நிலை முதன்மை குணநலன்கள் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்குச் செய்யும் முயற்சிகளை, அவர்களுடைய உயர்நிலை முதன்மை நற்பண்புகளும் குணநலன்களும் அடக்கி ஆளும்படி செய்யும். இவ்வாறாக அது இரண்டாம் நிலை நற்பண்புகளையும் குணநலன்களையும் அபிவிருத்தி செய்யும்.

*31.* *(5)* மூன்றாம் நிலை நற்பண்புகள் மற்றும் குணநலன்களின் உட்கூறுகளாக இணைக்கப்பட கூடிய பல்வேறு நற்பண்புகளையும் குணநலன்களையும், உயர்நிலை முதன்மை குணநலன்கள் பற்றிக் கொள்ளும் படி புது சித்தம் செய்யும். மேலும் அந்த உட்கூறுகளை அப்பியாசிக்க செய்வதின் மூலம், மூன்றாம் நிலை நற்பண்புகளையும் குணநலன்களையும் உருவாக்கும். *(6)* புதிய சித்தமானது உயர்நிலை முதன்மை நற்பண்புகள் மற்றும் குணநலன்களின் சமச்சீரான நிலையைக் காத்துக் கொள்வதின் மூலமும், உயர்நிலை முதன்மை நற்பண்புகள் மற்றும் குணநலன்கள் தாழ்நிலை முதன்மை பற்றுதல்களையும், நற்பண்புகளையும், குணநலன்களையும், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நற்பண்புகளையும் குணநலன்களையும் ஆண்டு கொள்ள செய்வதின் மூலமும், பாத்திரவான்களில் அவைகளைப் பலப்படுத்தி சமச்சீர்ப் படுத்தும். *(7)* மிக தீவிரமான பரீட்சைகளின் மத்தியில், முடிவு பரியந்தமும், உயர்நிலை முதன்மை நற்பண்புகள் மற்றும் குணநலன்களின் சமச்சீரான நிலையை விசுவாச உண்மைத்துவத்துடன் காத்துக் கொள்வதின் மூலமும், அவைகள் மற்றெல்லா பற்றுதல்களையும் நற்பண்புகளையும் குணநலன்களையும் விசுவாச உண்மைத்துவத்துடன் தொடர்ந்து ஆண்டு கொள்ளும்படி செய்வதின் மூலமும், பாத்திரவான்களின் புது சித்தமானது, அவர்களுடைய குணாம்சங்களை ஆவிக்குரிய தளத்தில் ஜீவனை அடைவதற்காகத் தேவ சாயலிலும் கிறிஸ்துவின் சாயலிலும் படிகப்படும்படி செய்யும்.

*32.* பாத்திரவான்களிலுள்ள பரிசுத்த ஆவியானது, ஆவிக்குரிய சித்தமாகச் செயல்பட்டு, அவர்களுடைய பற்றுதல்களில் மேலே சொல்லப்பட்ட அபிவிருத்தியை உண்டாக்குவது மட்டுமல்ல, அவர்களுடைய <u>மனரீதியான திறமைகளிலும்</u> விளைவுகளை உண்டு பண்ணும். அதாவது ஆவியின் ஜெநிப்பித்தலினால் அவர்களுடைய மனரீதியான திறமைகளுக்கு அளிக்கப்படும் ஆவிக்குரிய திறன்கள் ஆவிக்குரிய காரியங்களில் பூரணமாகச் செயல்படும்படி புது சித்தம் அவைகளைக் கையாளும். இவ்வாறாக *(1)* அவர்கள் கற்றுக் கொள்ளும் ஒவ்வொரு ஆவிக்குரிய காரியத்தையும் அவர்கள் <u>ஞாபகப்படுத்திக் கொள்ளும்படிக்கு</u>, அவர்களுடைய புது சித்தம் அவர்களுடைய ஆவிக்குரிய ஞாபகப்படுத்திக் கொள்ளுதலின் வல்லமைகளைப் பற்றிக் கொள்ளும், மேலும் ஆவிக்குரிய தளத்திற்குக் கீழான தளத்தில் அவர்கள் கற்றுக் கொண்ட காரியங்கள் சம்பந்தமாக அவர்களுடைய ஞாபகங்களைப் பூரணமாக்கும் *(2)* அவர்கள் ஆவிக்குரிய காரியங்களின் நுணுக்கமான விவரங்களைப் <u>புரிந்து கொள்ளும் படிக்கும்</u>, ஆவிக்குரிய தளத்திற்குக் கீழான தளங்களுக்குரிய காரியங்களைப் புரிந்து கொள்ளும் படிக்கும் அவர்களுடைய புது சித்தம் அவர்களுடைய புரிந்து கொள்ளுதலின் வல்லமைகளைப் பற்றிக் கொள்ளும். *(3)* அது போலவே அவர்கள் ஆவிக்குரிய காரியங்களைச் சரியாகப் <u>பகுத்தறிந்து நிதானிக்கும் படிக்கும்</u>, ஆவிக்குரிய தளத்திற்குக் கீழான தளங்களுக்குரிய காரியங்களையும் சரியாகப் பகுத்தறிந்து நிதானிக்கும் படிக்கும் அவர்களுடைய புது சித்தம் அவர்களுடைய பகுத்தறிந்து நிதானிக்கும் வல்லமைகளைப் பற்றிக்கொள்ளும்.

*33.* அவர்களுடைய மில்லினிய யுக அனுபவங்கள் மற்றும் செயல்பாடுகளினால், அவர்களுடைய மனுஷீக மனரீதியான, கலை ரீதியான, ஒழுக்க ரீதியான மற்றும் மத ரீதியான திறன்கள் அவைகளுடைய பல வகையான செயல்பாடுகளில் பூரணப்படுத்தப்படும். ஆனால் சொற்ப காலத்தில், அவர்கள் அவர்களுடைய ஆவியின் ஜெநிப்பித்தலின் மூலம், கிறிஸ்து வகுப்பாரும் திரள் கூட்டத்தாரும் இந்த வாழ்க்கையில் செய்ததையே செய்வார்கள். அதாவது ஆவிக்குரிய தளத்தில் ஜீவிப்பதற்கு அவர்களைத் தகுதிப்படுத்தும் குணாம்சத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக, அவர்களுடைய மனுஷீக தன்மையைப் பலி செய்வார்கள். ஆனால் திரள் கூட்டத்தாரைப் போலவே, பாத்திரவான்களும் ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் ஆசாரியர்களும் ராஜாக்களும் மட்டுமே அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வார்கள். பாத்திரவான்கள் லேவியர்களாகவும் பிரபுக்களாகவும் இருப்பதால் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள்.

*34.* அவர்களுடைய சொற்ப கால அனுபவமானது, *(1)* மனுஷர்களாக அவர்களை இயற்கையின் பிரமாணத்தின் கீழும், புது உடன்படிக்கையின் பிரமாணத்தின் கீழும் பரீட்சிக்கும், மேலும் *(2)* ஆணையினால் கட்டப்பட்ட உடன்படிக்கையில் அவர்களுக்குரிய பகுதிகள் சம்பந்தமாக அவர்களுடைய பலியின் உடன்படிக்கையின் கீழும் பரீட்சிக்கப்படுவார்கள். கர்த்தராகிய யெஷூஆ யோர்தான் முதல் கல்வாரி வரை, *(1)* ஒரு மனுஷனாக மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழும், ஆதாமுடைய பரீட்சையின் பிரமாணமாகிய இயற்கையின் பிரமாணத்தின் கீழும் பரீட்சிக்கப்பட்டார், மேலும் *(2)* ஒரு புது சிருஷ்டியாக ஆணையினால் கட்டப்பட்ட உடன்படிக்கையின் சாராள் அம்சம் சம்பந்தமாகப் பலியின் உடன்படிக்கையின் கீழும் பரீட்சிக்கப்பட்டார். அதுபோலவே பாத்திரவான்களும் ஒரே நேரத்தில் இருவகையான ஜீவன்கள் சம்பந்தமாகப் பரீட்சிக்கப்படுவார்கள். இந்த பரீட்சைகள் *(1)* மனுஷீக தளத்தில் அவர்களுடைய மனுஷீக குணாம்சங்களைத் தேவ சாயலிலும் கிறிஸ்துவின் சாயலிலும் படிகப்படுத்தும் மற்றும் *(2)* அவர்களுடைய புது சிருஷ்டிகளை ஆவிக்குரிய தளத்திற்குரிய தேவ சாயலிலும் கிறிஸ்துவின் சாயலிலும் படிகப்படுத்தும். இவ்வாறாக இந்த இரு அம்சங்களிலும் அவர்களிலுள்ள பரிசுத்த ஆவி படிகப்படுத்தப்படும். ஆனால் அவர்களுடைய பூரண மனுஷீகம், அதின் ஜீவ உரிமை மற்றும் ஜீவாதார உரிமைகள் நித்தியத்திற்கும் மரணத்தில் ஒப்புவிக்கப்படும். இவ்வாறாக அவர்கள் அவர்களில் படிகப்படுத்தப்பட்ட பரிசுத்த ஆவியுடன் ஏதேனுமொரு ஆவிக்குரிய தளத்தில் நித்தியத்திற்கும் ஆவிக்குரிய ஜீவனை அடைவார்கள்.

## பாத்திரவான்கள் தீவிரமாகச் சோதிக்கப்படுவார்கள்

*35.* பாத்திரவான்கள் அவர்களுடைய பூரண மனுஷீக தளத்தில் பரிசுத்த ஆவி சம்பந்தமாகவும், பூரண ஆவிக்குரிய தளத்தில் பரிசுத்த ஆவி சம்பந்தமாகவும் கடுமையாகப் பரீட்சிக்கப்படுவார்கள். மில்லினிய யுகத்தின் அறுவடையாக இருக்கப் போகிற சொற்ப காலத்தில், சுவிசேஷ யுக அறுவடையில் நடந்த ஆறு கொழித்தல்களும் பண்பான தோற்றம் உடையவைகளாக (கொழித்தல் நிகழ்வது வெளிப்படையாகக் காணப்படாமலே) திரும்ப நிகழும். சுவிசேஷ யுக அறுவடையின் முதல் ஐந்து கொழித்தல்கள் நடந்ததைப் போல் வெளிப்படையாக மோசமாக நடக்காது. ஏனென்றால் அவ்வாறு நடந்தால் செம்மறியாட்டு வகுப்பார் மட்டுமல்ல வெள்ளாட்டு வகுப்பாரும் அவைகளைப் புறக்கணிப்பார்கள். ஆகையால் சொற்ப காலத்தின் கொழித்தல்களின் உண்மையான தன்மையை வெள்ளாட்டு வகுப்பாரும் கண்டு கொள்ள முடியாதளவிற்கு, அவை பண்பான தோற்றம் உடையவைகளாக இருக்கும்.

*36.* இவ்வாறாக ஈடுபலி மறுதலித்தல், தேவனிடத்தில் உண்மைத்துவமின்மை, கலப்பட சேர்க்கை, திருத்தம், முறுமுறுத்தலோடு செய்யப்படும் முரண்பாடு ஆகியவற்றின் அடிப்படை கொள்கையுடைய மிகவும் நுணுக்கமான தப்பறைகள் அக்காலத்தில் மறைமுகமாக முன் வைக்கப்படும். இந்த கொழித்தல்கள் ஒவ்வொன்றும் தீமையில் அதிகரிக்கும். ஆனால் பாத்திரவான்கள் அக்காலத்தில் நடக்கிற காரியங்களின் உண்மையான தன்மையை அறிந்திருப்பார்கள். இருந்தாலும் எல்லோரிடமும் மிக மென்மையாகச் செயல்படுவார்கள். கொழித்தல்காரர்களும் அவர்களைப் பின்பற்றுபவர்களும் வேறு விதமாகச் செயல்பட வேண்டுமென்று அவர்களுக்கு மறைமுகமாக ஆலோசனை கூறுவதற்கு மேலாகப் பாத்திரவான்கள் எதையும் செய்ய மாட்டார்கள். வெள்ளாட்டு வகுப்பார் பாத்திரவான்களுக்கு விரோதமாக எழுப்பும் சந்தேகங்கள், மறைமுகமான குற்றச்சாட்டுக்கள், கேள்விகள், பழி சுமத்தல், கோரிக்கைகள் ஆகியவைகள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கும் போது, அவர்களோடு மென்மையாகச் செயல்படுவது பாத்திரவான்களுக்கு மிக பெரிய சோதனையாக இருக்கும்.

*37.* பாத்திரவான்களுடைய பரிசுத்த ஆவியின் மிக தீவிரமான சோதனை ஆறாம் கொழித்தலில் நடைபெறும். அறுவடை காலத்தின் நாற்பது வருடங்களுக்குப் பிறகு *(2874 - 2914* வரையுள்ள காலத்திற்குப் பிறகு – வெளி. *20:7,8)* புரட்சி என்னும் ஆறாம் கொழித்தல் உண்டாகும். அநேகமாக இந்த காலத்தில் கொழித்தல்காரர்கள் பாத்திரவான்களுக்கு எதிராக அதிகமதிகமாகவும், வெளிப்படையாகவும், அதிக துணிவுடனும் புரட்சி செய்வார்கள். அது உச்சநிலையை அடையும்போது, பாத்திரவான்களின் அதிகாரத்தை, நீக்குவதற்காகக், கொழித்தல்காரர்களும் அவர்களைப் பின்பற்றுபவர்களும் பாத்திரவான்களைக் கொலை செய்யவும் கூடும் (வெளி. *20:9).*

*38.* அவர்கள் பாத்திரவான்களைக் கொலை செய்யக் கூடுமென்று நாங்கள் சொல்வதற்குக் காரணமென்னவென்றால், ஏதேனுமொரு வன்மமான செயல் இல்லாமல், பூரண சூழ்நிலைகளின் மத்தியில் வாழ்கிற பல பூரண மனிதர்கள் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் வேறு எவ்வாறு மரிக்கக் கூடுமென்று புரிந்து கொள்வது கடினமானதாகும்.அவர்கள் கொலை செய்யப் பட்டாலோ அல்லது வேறு விதத்தில் அவர்களுக்கு மரணம் ஏற்பட்டாலோ, ஏதுவாக இருந்தாலும், அவர்களுடைய மனுஷீகம் மற்றும் புது சிருஷ்டி இரண்டும் தீவிரமாகப் பரீட்சிக்கப்படும். அவர்களிலுள்ள பரிசுத்த ஆவி இந்த இரு அம்சங்களிலும் படிகப்பட்டிருப்பதை இந்த பரீட்சைகள் நிரூபிக்கும். இவ்வாறாக அவர்கள் நித்திய ஜீவனுக்குப் பாத்திரர் என்று நிரூபிக்கப்படும். அவர்களுடைய பரீட்சையின் காலத்தின் முடிவில் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் நித்திய துதி உண்டாகும் படிக்கு, அவர்களுடைய நித்தியமான குணாம்சமாகிய பரிசுத்த ஆவியோடு அவர்களுக்கு ஆவிக்குரிய தளத்தில் நித்திய ஜீவன் அளிக்கப்படும். இதனோடு நாம் பாத்திரவான்களிலுள்ள தேவனுடைய மன இயல்பாகிய பரிசுத்த ஆவியைப் பற்றிய நம்முடைய ஆய்வை முடிக்கிறோம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

# யாவே தேவன் நியமித்த பண்டிகைகள் - அடையாளம் மற்றும் நிஜ நிறைவேறுதல்

## லேவி. *23*

### *PT# 488, Mar-Apr 1967, pp. 22-24*

*1.* **மோ**சே எழுதின ஐந்து புத்தகங்களில் பண்டிகைகளைப் பற்றிய முழு விவரமும் ஒரே இடத்தில் கொடுக்கப்படவில்லை. ஆனால் சில வேதப்பகுதிகள், பண்டிகைகள் சம்பந்தப்பட்ட விவரத்தை, ஏதேனுமொரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் சுட்டிக்காட்டுகின்றன. லேவி. *23;* எண். *28* மற்றும் *29*-ம் அதிகாரங்கள் பண்டிகைகளைப் பற்றிய மிக அதிக விவரத்தைக் கொடுக்கின்றன. லேவி. *23*-ம் அதிகாரமானது எல்லா பண்டிகைகளையும் குறிப்பிடவில்லை. அல்லது ஏற்கனவே பல்வேறு இடங்களில் பண்டிகைகளைக் குறித்து கொடுக்கப்பட்ட கட்டளைகளைச் சுருக்கமாகவோ அல்லது முழுமையாகவோ கூட குறிப்பிடவில்லை. லேவி.*23*-ம் அதிகாரமானது விசேஷித்த பரிசுத்த நாட்களாக அனுசரிக்கும்படி சபை கூடி வரும்படி, தேவன் நியமித்த காலங்களின் பட்டியலையும், அவைகள் சம்பந்தப்பட்ட காரியங்களையும் நமக்குக் கொடுக்கிறது. இது அந்த அதிகாரத்தின் தலைப்பு வசனம் நமக்கு மிக தெளிவாகக் காண்பிக்கிறது (லேவி. *23: 2*): "சபை கூடி வந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி நீங்கள் கூற வேண்டிய பண்டிகை நாட்கள், இவைகளே என்னுடைய பண்டிகைகள்" *(even these are my feasts KJV* பார்க்கவும், - அதாவது எனக்காக அனுசரிக்கப்பட்ட, எனக்காகப் பரிசுத்தமாக்கப்பட்ட பண்டிகைகளாகக் கருதப்பட வேண்டும்).

*2.* நியாயப்பிரமாணத்தின்படி பொது ஆராதனைக்காகக் குறிப்பாக நியமிக்கப்பட்ட நேரங்கள் இவ்வாறாக இருந்தன: *(a)* அனுதினமும் காலையிலும் மாலையிலும் செலுத்தப்பட வேண்டிய பலிகளின் நேரங்கள், சில நேரங்களில் இவைகள் "நித்திய சர்வாங்க தகன பலிகள்" என்றழைக்கப்பட்டன: *(b)* வாரந்தோறும் அனு

சரிக்கப்படும் ஓய்வு நாட்கள்: *(c)* மாதப்பிறப்புகள் மற்றும் *(d)* "பண்டிகைகள் (நியமிக்கப்பட்ட பண்டிகைகள் எண். *29:39, set feasts -KJV* பார்க்கவும்)", அல்லது வருடந் தோறும் அனுசரிக்கப்படும் படிக்கு நியமிக்கப்பட்ட காலங்கள். இவ்வாறு வருடந்தோறும் அனுசரிக்கப்படும் படிக்கு ஐந்து காலங்கள் நியமிக்கப்பட்டிருந் தன : *(1)* பஸ்கா, *(2)* பெந்தெகொஸ்தே நாள், *(3)* எக்காள பண்டிகை, *(4)* ஒப்புரவாகுதலின் நாள், *(5)* கூடாரப் பண்டிகை *(1 நாளா. 23: 30, 31; 2 நாளா. 8: 13; 31: 3;*நெகே. *10: 32;* ஏசா. *1: 13, 14).* இந்தக் காலங்கள் ஒவ்வொன்றுக் கும் அதற்குரிய விசேஷித்த பலிகள் நியமிக்கப்பட்டிருந் தன. இந்தக் காலங்கள் எல்லாம் எண். *28* மற்றும் *29*-ம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த வேத பகுதிகளில் பண்டிகை பலிகள் விவரமாகக் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. மற்ற எந்த வேத பகுதியிலும் அவை கள் அவ்வளவு விவரமாகக் குறிப்பிடப்படவில்லை. எண். *28: 3, 9, 11, 16, 26; 29: 1, 7, 12* வசனங்களில் இந்த காலங் களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. தினந் தோறும் காலையிலும் மாலையிலும் செலுத்தப்படும் ஆராதனைகளும் *(எண். 28: 3,4),* மாதப்பிறப்புகளும் *(ஏழாம் மாதப் பிறப்பைத் தவிர மற்ற மாதப்பிறப்புகள்)* சபை கூடி வந்து பரிசுத்த நாட்களாக விசேஷமாக அனுசரிப்பதற்குரிய நாட்களாக இல்லாததால் அவைகள் லேவி.*23*-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்படவில்லை.

*3.* எபிரெய வேதாகமத்தில் லேவி. *23*-ம் அதிகாரத்தில் "மோவாத்" *(moad)* மற்றும் "காக்" *(chag)* என்ற இரு தனிப்பட்ட எபிரெய வார்த்தைகள் உபயோ கிக்கப்படுகின்றன. ஆனால் தமிழ் வேதாகமத்திலும் ஆங்கில வேதாகமத்திலும் அவைகள் இரண்டும் ஒன்றா கவே "பண்டிகை அல்லது பண்டிகைகள்" *(feast or feasts)* என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. *(a)* மோவாத் (பன்மையில் மோவாதிம்) என்ற வார்த்தை லேவி. *23:2* (இரு முறை),*4, 38,44*-ம் வசனங்களில் உபயோகிக்கப் படுகிறது. அது "நியமிக்கப்பட்ட பண்டிகைகள்" *(set feasts)*அல்லது "குறிக்கப்பட்ட காலங்கள்"*(appointed times)* என்பதை அர்த்தப்படுத்துகிறது. *ARV, RSV,* ரோதர் ஹாம் மொழி பெயர்ப்புகள் அதை அவ்வாறு மொழி பெயர்க்கின்றன. ஏசா. *33:20;* எசே. *45:17*-ம் வசனங் களிலும் "மோவாதிம்" என்ற வார்த்தை "பண்டிகைகள்" என்று மொழி பெயர்க்கப்படுகிறது. ஆனால் எசே. *46:11*-ம் வசனத்தில் அது சரியாக "குறிக்கப்பட்ட காலங் கள்" என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆகை யால் லேவி. *23: 2*-ம் வசனத்தில் "இவைகளே என்னுடைய குறித்த காலங்கள்" என்று மொழி பெயர்ப்பது சரியா னதாகும். *(b)* காக் (பன்மையில் காக்கிம்) என்று லேவி. *23: 6, 34, 39, 41*-ம் வசனங்களில் வருகிறது. அது "நடனமாடு வது" என்ற அர்த்தமுடைய மூல வார்த்தைகளிலிருந்து வருவிக்கப்படுகிறது *(BDB Hebrew Lexicon).* ஆகையால் அது விசேஷமான களிகூருதல் மற்றும் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட வேண்டிய காலங்களைக் குறிக்கும் மகிழ்ச்சியான பண்டிகைகளாகிய பஸ்கா, பெந்தெ கொஸ்தே மற்றும் கூடாரப் பண்டிகைகள் சம்பந்தமாக இந்த வார்த்தை உபயோகிக்கப்படுகிறது. இந்த காலங் கள் எல்லாவற்றிலும் இஸ்ரயேலின் ஆண் மக்கள் எல்லா ரும் யாவே தேவனுடைய சந்நிதியில் வரவேண்டிய தாயிருந்தது *(யாத். 23: 17; 34: 23; உபா. 16: 16; E Vol 11, pp. 398, 399; E Vol 14, p. 278).* லேவி. *23*-ம் அதிகாரமானது, மகிழ்ச்சி மற்றும் சந்தோஷத்துடன் கொண்டாட வேண்டிய இந்த மூன்று காலங்களைக் (காக்கிம்) குறிப்பிடுவதற்குக் கூடுதலாகப் "பரிசுத்த சபை கூடுத லுக்காக" "குறிக்கப்பட்ட காலங்கள்" (மோவாதிம்) எல்லாவற்றையும் குறிப்பிடுகிறது. இந்த மூன்று பெரிய பண்டிகைகளும் (காக்கிம்) பரிசுத்த சபை கூடுதலுக்காகக் குறிக்கப்பட்ட காலங்களாகவும் இருக்கின்றன.

*4.* இந்தப் பண்டிகைகளுக்குரிய ஏற்பாடுகள் சம்பந்தமாக ஏழு என்ற எண் பலமுறை உபயோகிக் கப்படுகிறது *(லேவி.23: 3, 6, 8, 15, 16, 18, 24, 27, 34, 36, 39, 40, 41).* இந்த எண் திரும்பத் திரும்ப உபயோகிக்கப் படுவது என்பது, அந்தப் பண்டிகைகள் எல்லாம் தேவ னால் கொடுக்கப்பட்டவைகள் என்பதற்கு உறுதியான சான்றாக இருக்கிறது. மேலும் ஒவ்வொரு பண்டிகையும் தனிப்பட்ட முறையில் முழுமையான ஒன்றாக இருக்க திட்டமிடப்பட்டது என்பதையும் நிரூபிக்கிறது.

*5.* லேவி. *23:1,2* பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: சபைகூடி வந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி, நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாட்களாவன: நிஜ நிறைவேறுதலில் தேவ னுடைய செயலதிகாரியாகவும், தேவனுடைய ஜனங்க ளின் தலைவராகவும் இருக்கிற யெஷுஆ, அவருடைய சுவிசேஷ யுக ஜனங்களுக்கு, சில ஆசீர்வாதமான நிலை மைகள் அல்லது நிலைகளைக் குறித்துப் போதிக்க வேண்டுமென்று, தேவன் யெஷுஆவுக்குக் கட்டளை யிட்டார் (அதுபோலவே அவருடைய மில்லினிய யுக ஜனங்களுக்கு இவைகளைப் போதிக்க வேண்டுமென்று கிறிஸ்து வகுப்பாருக்குக் கட்டளையிடப்படும்). இந்த ஆசீர்வாதமான நிலைமைகளில் தேவனுடைய ஜனங்கள் பங்கு கொள்ளும் படி தேவன் தாமே அவைகளை அவர் களுக்காக ஏற்பாடு செய்தார். அவைகள் தேவனுக்கு விசேஷமாகப் பரிசுத்தமானவைகளாக இருக்கின்றன வென்றும், ஜனங்கள் ஒன்றாக இணைந்து பெற்றுக் கொள்கிற கிருபை, அறிவு மற்றும் ஊழியத்தின் ஆசீர்வாத மான சிலாக்கியங்களாகவும் அனுபவங்களாகவும் இருக் கின்றனவென்றும் அறிவிக்க அவர்களுக்குக் கட்டளை யிடப்பட்டது.

*6.* ஜனங்கள் ஒன்றாக இணைந்து பெற்று கொள்கிற இந்த சிலாக்கியங்களிலும் அனுபவங்களிலும் பின்வருபவைகள் அடங்கி இருக்கின்றன: *(a)* நிஜ நிறை வேறுதலான இஸ்ரயேலர்கள் ஒரே கூட்டமாக ஒன்றாக இணைந்து சுவிசேஷ யுகம் முழுவதும், விசேஷமாக அந்த யுகத்தின் ஆரம்ப மற்றும் முடிவு காலங்களாகிய இரு அறுவடைகளின் கூடுகைகளில் *(சங். 50:5; 1கொரி.10:11)* பெற்றுக் கொண்ட சிலாக்கியங்கள் மற்றும் அனுபவங் கள் மற்றும் *(b)* ஒவ்வொரு தனி நபராகிய நிஜ நிறை வேறுதலான இஸ்ரயேலின் முழு கிறிஸ்தவ வாழ்க்கை, விசேஷமாக அதின் ஆரம்ப மற்றும் முடிவு காலங்களின் சிலாக்கியங்கள் மற்றும் அனுபவங்கள். இரு அறுவடை காலங்களிலும் நிஜ நிறைவேறுதலான இஸ்ரயேலுக்குக் கிருபையிலும் அறிவிலும் ஊழியத்திலும் மிகவும் முக்கிய மான, ஆசீர்வாதமான மற்றும் ஒரு கூட்டமாகப் பரிசுத்த மான சிலாக்கியங்களும் அனுபவங்களும் இருந்தன வென்பதில் சந்தேகமில்லை. நம் ஒவ்வொருவருக்கும் கிடைத்த இந்த ஆசீர்வாதமான சிலாக்கியங்களிலும் அனுபவங்களிலும் நாம் பெரிதும் களி கூருவோமாக!

## வாரந்தோறும் அனுசரிக்கப்பட வேண்டிய ஓய்வு நாள்

*7.* லேவி. *23:3* ஆறுநாளும் வேலை செய்ய

வேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்த சபைகூடுதலான ஓய்வு நாள், அதில் ஒரு வேலையும் செய்யவேண்டாம்; அது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக. யாத். 23: 12, 14; 34: 21-23; எண். 28: 9-31-ல் குறிப்பிடப்பட்டதைப் போலவே, லேவி. 23-ம் அதிகாரத்திலும் வாரந்தோறும் அனுசரிக் கப்பட வேண்டிய ஓய்வு நாள், வருடந்தோறும் அனுசரிப் பதற்குக் குறிக்கப்பட்ட காலங்களுக்கு முன்னே சொல்லப்படுகிறது. அது பரிசுத்த சபை கூடுதலின் பட்டியலில் முதலாவதாகக் குறிப்பிடப்படுவது ஏற்றதாக இருக்கிறது. ஏனென்றால் (a) தேவனுடைய நியாயமாக் கப்பட்ட ஜனங்கள் அனைவருக்கும் அது அடிப்படை யாகவும் பொதுவானதாகவும் இருக்கிறது ("விசுவாசித்த வர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக் கிறோம்" – எபி.4:3) மற்றும் (b) பரிசுத்த காலங்களின் முழு தொகுப்பும் ஓய்வு நாளின் இயல்புடையதாக இருக் கிறது.

8. வாரந்தோறும் அனுசரிக்கப்பட வேண்டிய ஓய்வு நாளானது, விசுவாசத்தினால் நியாயமாகு தலின் ஓய்வை, அதாவது விசுவாசத்தினால் நம்முடைய கணக்கில் எழுதப்படுகிற மில்லினிய யுக ஆசீர்வாதங் களை அடையாளப்படுத்துகிறது. பாவத்தையும் சாபத்தை யும், அவைகளின் விளைவுகளையும் மனுகுலம் ஆறு 1000 வருட நாட்களுக்குச் சகிக்க வேண்டியதாயிருந்தது (ஆறு நாளும் வேலை செய்ய வேண்டும்). ஆனால் அதற்கடுத்து வருகிற ஏழாம் 1000 வருட நாளாகிய மில்லினிய யுகத்தில் மனுகுலம் பாவம், சாபம் மற்றும் அவைகளின் விளைவுகள் ஆகியவற்றினால் பாடுபடுவ திலிருந்து ஓய்வு பெறும்.

9. இந்த வாழ்க்கையிலேயே விசுவாசத்தினால் நியாயமாகுதலை அடைகிறவர்களை பொறுத்தவரை, அவர்களுடைய நிஜ நிறைவேறுதலான ஆறு 1000 வருட நாட்கள் அவர்களுடைய நியாயமாகுதலுக்கு முன்னிருந்த வாழ் நாட்களாகும். அவர்களுடைய ஏழாம் 1000 வருட நாளானது, அவர்களுடைய நியாயமாக்கப்பட்ட மனுஷீ கம் விசுவாசத்தினால் உண்டான நியாயமாகுதலை அனு பவிக்கும் காலமாகும். ஏனென்றால் விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட்டவர்களுக்கு, மில்லினிய யுகத்தில் சாபத்திலிருந்து கிடைக்கிற ஓய்வு இப்பொழுதே கணக் கில் எழுதப்படுகிறது [ஏழாம் நாள்...பரிசுத்த ...ஓய்வு நாள், அதில் ஒரு வேலையும் செய்ய வேண்டாம்]. அது தேவனுடைய ஜனங்கள் அனைவரும் ஒன்றாகப் பெற்றுக் கொள்கிற ஆசீர்வாதமான சிலாக்கியமாகவும் அனுபவ மாகவும் இருக்கிறது (பரிசுத்த சபை கூடுதல்). அது யாவே தேவன் தாமே ஏற்பாடு செய்த ஓய்வாக இருக்கிறது (கர்த்தருடைய ஓய்வு நாள்). மேலும் எங்குமுள்ள தேவ னுடைய ஜனங்கள் அனைவரும் அதை அவருக்கென்று பரிசுத்தமாக அனுசரித்து அதில் மகிழ்ச்சி கொள்ள வேண்டும் (உங்கள் வாசஸ்தலங்களில் எல்லாம்).

10. லேவி. 23:4 சபைகூடிவந்து பரிசுத்தமாய் ஆசரிக்கும்படி, நீங்கள் குறித்தகாலத்தில் கூறவேண்டிய கர்த்தரின் பண்டிகைகளாவன: ... சபை கூடி வந்து பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டிய வருடாந்தர பண்டிகை களைக் (மோவாதிம், குறிக்கப்பட்ட காலங்கள்) குறித்து லேவி. 23:4-ம் வசனத்திலிருந்து சொல்லப்படுகின்றன. வாரந்தோறும் அனுசரிக்கப்படும் ஓய்வு நாட்களுக்குக் கூடுதலாக, வருடந்தோறும் ஓய்வு நாட்களாகக் கண்டிப் பாக அனுசரிக்கப்பட்டு, சபை கூடி வர வேண்டிய ஏழு நாட்கள் இருந்தன: (1) புளிப்பில்லா அப்பப் பண்டிகை யின் (பஸ்கா பண்டிகை) முதலாம் நாள், (2) புளிப்பில்லா அப்பப் பண்டிகையின் ஏழாம் நாள், (3) பெந்தெ கொஸ்தே நாள் (ஐம்பதாம் நாள் - "ஏழாம் ஓய்வு நாளுக்கு மறுநாள்" - லேவி. 23:16), (4) எக்காள பண்டிகையின் நாள் (5) பாவ நிவாரண நாள் (ஒப்புரவாகுதலின் நாள்), (6) கூடா ரப் பண்டிகையின் முதலாம் நாள், (7) கூடாரப் பண்டிகை யின் ஏழு நாட்கள் பண்டிகையை ஆசரித்த பிறகு வரும் எட்டாம் நாள் (யாத். 12: 16; எண். 28: 16-18, 25, 26; 29: 1, 7, 12, 35).

## புளிப்பில்லா அப்பப் பண்டிகை
*(லேவி. 23:5-14)*



11. புளிப்பில்லா அப்பப் பண்டிகையின் முத லாம் மற்றும் ஏழாம் நாட்கள் நிசான் 15 மற்றும் 21 பரிசுத்த சபை கூடுதலின் நாட்களாக இருந்தன (லேவி. 23: 5 -14). இந்த பரிசுத்த சபை கூடுதல்கள் எபேசு மற்றும் லவோதிக்கேயா சபைகளின் காலங்களில் தேவனுடைய ஜனங்களின் கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆசீர்வாதமான சிலாக்கியங்களையும் அனுபவங்களையும், இந்த காலங் களில் தேவனுடைய ஜனங்களின் நியாயமாக்கப்பட்ட நிலையில், அவர்கள் சத்தியம், நீதி, அன்பு மற்றும் பரத்துக்குரிய சிந்தை ஆகியவற்றில் பங்கு கொள்ளும் போது, பாவம், தப்பறை, சுயநலம், உலகத்தனம் ஆகிய வற்றின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் என்ற உணர்வினால் அவர்களுக்கு மிகுந்த சந்தோஷமும் சமாதானமும் உண்டானது (1 கொரி. 5: 8; ரோம. 14: 17, 18). பஸ்கா பண்டிகை சம்பந்தப்பட்ட காரியங்களைக் குறித்து நாம் இங்கே மேலும் கருத்தில் கொள்ளப் போவதில்லை. ஏனென்றால் அந்தக் காரியங்கள் ஏற்கனவே விளக்கப் பட்டிருக்கின்றன – P Vol. 6 457-484; E Vol.11, pp. 158-187 (யாத்.12-ம் அதிகாரத்தில் பஸ்கா ஸ்தாபிக்கப்படுதலின் விவரங்களின் அடிப்படையிலுள்ளப் பொதுவான விளக் கம்) மற்றும் E Vol. 8, pp. 603-620 (எண். 9:1-14 வரையுள்ள வசனங்களின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட கூடுத லான கருத்துக்கள்.

12. லேவி. 23:9,10 பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்லவேண்டி யது என்னவென்றால்: நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய்ச் சேர்ந்து, அதின் வெள்ளாண் மையை அறுக்கும்போது, உங்கள் அறுப்பின் முதற்பல னாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டு வரக்கடவீர்கள். கர்த்தராகிய யெஷுவா மூன்றாம் நாளில் (நிசான் 16) உயிர்த்தெழுவார் என்பதைப் பற்றிய போதனைகளை அவர் தேவனுடைய ஜனங்களுக்குக்

கொடுக்க வேண்டுமென்று தேவன் அவருக்குக் கட்டளை யிட்டார் (லேவி. 23 :9,10). யெஷுஆ லோகாஸாக இருந்த போது அது சம்பந்தப்பட்ட பழைய ஏற்பாட்டு வசனங் களைக் கொடுக்கும்போது இந்த வேலையின் ஒரு பகுதியைச் செய்தார். நாம் இப்பொழுது ஆராய்ந்து கொண்டிருக்கிற வேத வசனங்களையும் அவர் லோகாஸாக இருந்த போது கொடுத்தார். ஆனால் அவரு டைய பூமிக்குரிய ஊழியத்தின் முடிவு காலத்தில் அவர் அவருடைய சீஷர்களுக்கு இந்த காரியங்களைக் குறித்து இன்னும் விசேஷமாகப் போதித்தார் (எ.டு. மத். 16:21). சீஷர்கள் கர்த்தரின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு காலத் திற்குரிய சத்தியம் மற்றும் அதின் ஆவிக்குரிய செயல் எல்லைக்குள் வந்த பிறகு (தேசத்தில் நீங்கள் போய் சேர்ந்து), யூத யூக அறுவடையில் தொடங்கி (அறுக்கும் போது), அவர்கள் பின்வரும் காரியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க வேண்டுமென்று கர்த்தர் அவர்களுக்குப் (மற்றும் சுவிசேஷ யுகத்தின் மற்ற தேவ ஜனங்கள்) போதித்தார்: நம்முடைய கர்த்தர் உயிர்த்தெழுந்த புது சிருஷ்டியாக இருக்கிறாரென்று, அதாவது நித்திரை அடைந்தவர்களில் முதற் பலனானார் என்று சாட்சி கொடுக்க வேண்டியதாயிருந்தது [முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டு வரக் கடவீர் கள் (அப். 26: 22, 23; 1 கொரி. 15: 4, 20, 23; கொலோ. 1: 18-ம் வசனங்களைப் பார்க்கவும்)].

13. லேவி. 23:11-14 <u>உங்களுக்காக அது அங்கி கரிக்கப்படும்படி, ஆசாரியன் அந்தக் கதிர்க்கட்டை ஓய்வு நாளுக்கு மறுநாளில் கர்த்தருடைய சந்நிதியில் அசை வாட்டவேண்டும். நீங்கள் அந்தக் கதிர்க்கட்டை அசை வாட்டும் நாளில் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக, ஒரு வயதான பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியையும், கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெ யிலே பிசைந்ததுமான மெல்லிய மாவாகிய போஜன பலியையும், திராட்சப்பழரசத்திலே காற்படியாகிய பான பலியையும் செலுத்தக்கடவீர்கள். உங்கள் தேவனுக்குக் காணிக்கையை நீங்கள் கொண்டுவரும் அந்நாள் மட்டும், அப்பமும் வாட்டிய கதிரும் பச்சைக்கதிரும் புசியீர்களாக; இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலை முறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை.</u> நம் முடைய கர்த்தர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த ஒரு புதுசிருஷ்டியாகத் தம்மை யாவே தேவனுக்கு முன்பாக ஒப்புக் கொடுத்தார். அதற்குப் பிறகு அவர் தொடர்ந்து தேவனுடைய ஊழியத்தில் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாக வும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார் (அசைவாட்டவேண் டும்). மேலும் (அவருடைய பரமேறுதலுக்குப் பிறகு) சபை வகுப்பாருக்காகவும், அவர்களை நியாயமாக்குவதற் காகவும், அவர்களுக்காக வேண்டுதல் செய்வதற்காகவும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படும்படிக்கு (உங்களுக்காக அது அங்கீகரிக்கப்படும்படி) தம்மை ஒப்புக் கொடுத்தார் (ரோம. 6: 9, 10; 4: 25; எபி. 7: 25). இந்த காணிக்கை தேவ னுக்கு மிகவும் பிரியமான ஒன்றாக இருந்தது (சர்வாங்க தகனபலி). மேலும் அதனோடு கூட சத்தியத்தின் ஆழமான மற்றும் எளிமையான அம்சங்கள் போதிக்கப்பட்டன (போஜன பலி…பானபலி). தேவனுடைய சுவிசேஷ யுக ஜனங்கள் கர்த்தராகிய, யெஷுஆ கிறிஸ்துவின் உயிர்த் தெழுதலுக்குப் பிறகு அவருடைய உயிர்த்தெழுதலையும், தேவனுடைய திட்டத்தில் அதற்குரிய முக்கியத்துவத் தையும் அறிக்கை பண்ணாமல் காலத்திற்குரிய சத்தியத் தில் பங்கு கொள்ளக் கூடாததாயிருந்தது (காணிக் கையை… கொண்டு வரும் அந்நாள் மட்டும்… புசியீர் களாக). சுவிசேஷ யுகம் முழுவதும், சபையின் ஒவ்வொரு காலகட்டத்திலும் இதுவே அவர்களுக்காகத் தேவன் செய்த ஏற்பாடாக இருந்தது. இது மில்லினிய யுகத்திற் குரிய ஏற்பாடாகவும் இருக்கும் (தலைமுறைதோறும் செல்ல வேண்டிய நித்திய கட்டளை). நாம் கர்த்தருடைய உயிர்த்தெழுதலை எப்பொழுதுமே ஏற்ற விதத்தில் அங்கீ கரித்து அறிக்கை பண்ணுவோமாக.

## பெந்தெகொஸ்தே,
## முதற் பலன்களின் பண்டிகை
## *(லேவி. 23:15-22)*



14. லேவி. 23:15,16 <u>நீங்கள் அசைவாட்டும் கதிர்க்கட்டைக் கொண்டுவரும் ஓய்வுநாளுக்கு மறுநாள் முதற்கொண்டு எண்ணத்துவக்கி, ஏழுவாரங்கள் நிறை வேறினபின்பு, ஏழாம் ஓய்வுநாளுக்கு மறுநாளாகிய ஐம்பதாம் நாள்மட்டும் எண்ணி, கர்த்தருக்குப் புதிய போஜனபலியைச் செலுத்தக்கடவீர்கள்.</u> பெந்தெ கொஸ்தே நாள் என்பது பழைய ஏற்பாட்டில் “அறுப்பு கால பண்டிகை” என்றும், “வாரங்களின் பண்டிகை” என்றும் அழைக்கப்பட்டது (யாத். 23: 16; 34: 22; உபா. 16: 10, 16; 2 நாளா. 8: 13). இதுவே “முதற் பலன்களின் பண்டிகை”யாயிருந்தது (லேவி.23:15-21;எண்.28:26). அந் நாளில் முதற் பலன்களிலிருந்து செய்யப்பட்ட அசை வாட்டும் காணிக்கையாயிருக்கிற இரண்டு அப்பங்கள் யாவே தேவனுக்கு முன்பாக அசைவாட்டப்பட வேண்டி யதாயிருந்தது. இந்த கண்ணோட்டத்திலிருந்து அந்நாள் சுவிசேஷ யுகம் முழுவதையும் அடையாளப்படுத்தும். ஏனென்றால் விரிவான கருத்தில் நிஜ நிறைவேறுதலான முதற் பலன்களாகிய (யாக்.1:18;E Vol 5, pp.54-61) சிறு மந்தை மற்றும் திரள் கூட்டத்தாரின் புதுசிருஷ்டிகளுக் காக, பரிசுத்த ஆவி ஊற்றப்படும் காலம், சுவிசேஷ யுக மாக இருந்தது. “ஊழியக்காரருக்காகவும் (சிறுமந்தை) ஊழியக்காரிகளுக்காகவும் (திரள் கூட்டத்தார்) அந்நாட் களிலே (சுவிசேஷ யுகம்) என் ஆவியை ஊற்று வேன்”. வெளி. 14:4-ம் வசனத்தில் 1,44,000 பேர் “தேவ னுக்கும் ஆட்டுக்குட்டியானவரும் முதற் பலனாக மீட்டுக் கொள்ளப்பட்டவர்கள்” என்றழைக்கப்படுகிறார்கள். இது லேவி. 23:17-ம் வசனத்தில் சொல்லப்பட்ட “கர்த்தருக்கென்று முதற்பலன்” என்ற சொற்றொடருக்கு மிகவும் ஒத்ததாயிருப்பதைக் கவனியுங்கள். ஆனால்

லேவி. 23:17-ம் வசனத்தில் சொல்லப்பட்ட முதற்பலன்களில் நிஜ நிறைவேறுதலான இரண்டாம் அசைவாட்டும் காணிக்கையாயிருக்கிற அப்பமாகிய திரள் கூட்டத்தாரும் இருக்கிறார்கள். பெந்தெகொஸ்தே நாளின் பரிசுத்த சபை கூடுதலானது, சுவிசேஷ யுகத்தில் புதுசிருஷ்டிகளின் ஆசீர்வாதமான சிலாக்கியங்களையும் அனுபவங்களையும், நிஜ நிறைவேறுதலான முதற் பலன்களாக ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கிருந்த மிகுந்த சந்தோஷத்தையும் அடையாளப்படுத்துகிறது. இது அவர்கள் ஆவியில் பிறந்த நிலை மற்றும், முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையின் (எபி. 12:23) நிலைக்குள் பிரவேசிப்பதற்கு முன்பு அவர்களுடைய சுவிசேஷ யுக நிலையாக இருந்தது.

15. முதற்பலனாகிய அசைவாட்டும் காணிக்கையாயிருக்கிற அப்பங்கள் செலுத்தப்படுவது சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட பலிகள், அவைகளுடைய நிஜ நிறைவேறுதல் கி.பி. 33-ல் பெந்தெகொஸ்தேயில் தொடங்கி, திரள் கூட்டத்தார் அனைவரின் பூமிக்குரிய ஓட்டத்தின் முடிவு வரையுள்ள காலத்திற்குரியது என்பதை நிரூபிக்கிறது. ஏற்கனவே பார்த்ததைப் போல், நிஜ நிறைவேறுதலான முதற் பலன்களில் முதல் பழுத்த கதிர்க் கட்டாகிய யெஷுஆவுடன் கொடுக்கப்பட்ட காணிக்கைகள் சர்வாங்க தகன பலியாகவும், அதனோடு கூட கொடுக்கப்பட்ட போஜன பலியாகவும் பான பலியாகவும் இருந்தன. ஆனால் அப்போது பாவ நிவாரண பலி எதுவும் செலுத்தப்படவில்லை. சமாதான பலி எதுவும் அசைவாட்டப்படவில்லை. ஏனென்றால் புதுசிருஷ்டியாக யெஷுஆ உயிர்த்தெழுந்த போது செலுத்தப்படும் காரியத்திற்கு இவைகள் பொருந்தாது. பாவத்திற்காகச் செலுத்தப்பட்ட பலி முடிவடைந்த பிறகும், அதற்குரிய உடன்படிக்கையின் பொருத்தனைகள் முடிவு பரியந்தம் விடாமுயற்சியோடு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட பிறகும் தான் புதுசிருஷ்டியாகக் கர்த்தராகிய யெஷுஆ உயிர்த்தெழுந்தார். இந்த காரணத்தினால் தான், நிஜ நிறைவேறுதலான முதற் பலன்களில் கதிர்க்கட்டுடன், பாவ நிவாரண பலி எதுவும் செலுத்தப்படவில்லை, சமாதான பலி எதுவும் அசைவாட்டப்படவில்லை [ஏனென்றால் இவைகள் ஏற்கனவே முடிவுபெற்ற காரியங்களாக இருக்கின்றன].

16. லேவி. 23:17-21 <u>நீங்கள் ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவிலே புளிப்பாகப் பாகம்பண்ணப்பட்ட அசைவாட்டும் காணிக்கையாயிருக்கிற இரண்டு அப்பங்களை உங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டு வந்து, அப்பத்தோடேகூடக் கர்த்தருக்குச் சர்வாங்க தகன பலியாக, ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு காளையையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக அவைகளுக்கு அடுத்த போஜனபலியையும், பானபலிகளையும் செலுத்தி, வெள்ளாடுகளில் ஒரு கடாவைப் பாவ நிவாரணபலியாகவும், ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளைச் சமாதான பலியாகவும் இடக்கடவீர்கள். அவைகளை ஆசாரியன் முதற்பலனாகிய அப்பத்தோடும் இரண்டு ஆட்டுக்குட்டிகளோடுங்கூடக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டக்கடவன்; கர்த்தருக்குப் பரிசுத்தமாகிய அவைகள் ஆசாரியனுடையவைகளாகும். அந்த நாள் உங்களுக்குச் சபை கூடும் பரிசுத்த நாள் என்று கூறவேண்டும்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது; இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை.</u> ஆனால் பெந்தெகொஸ்தே அன்று அசைவாட்டப்படுகிற அப்பங்களுடன் சர்வாங்க தகன பலிகளும், அவைகளுக்குரிய போஜன மற்றும் பான பலிகள் மட்டுமல்ல, பாவ நிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவும், சமாதான பலியாக இரண்டு ஆட்டுக்குட்டிகளும் செலுத்தப்பட்டன. இந்த இரண்டு ஆட்டுக்குட்டிகள் அசைவாட்டும் பலியாக அசைவாட்டப்பட்டன (லேவி. 23:18-20). அசைவாட்டப்படுகிற இரு அப்பங்களுடன் இந்த பலிகளும் செலுத்தப்படுவதென்பது, இந்த அப்பங்கள் பலி செய்கிற புது சிருஷ்டிகளை அடையாளப்படுத்துவதை நிரூபிக்கிறது. ஆகையால் இது பெந்தெகொஸ்தே நாள் முதல், திரள் கூட்டத்தாரின் கடைசி அங்கத்தினரின் பூமிக்குரிய ஓட்டத்தின் முடிவு வரையுள்ள காலமாக இருக்க வேண்டும். ஒரே ஒரு பாவ நிவாரண பலி செலுத்தப்படுவதென்பது நிஜ நிறைவேறுதலான இரு அப்பங்களில் ஒரு அப்பம் மட்டுமே (சிறுமந்தை மட்டுமே) பாவ நிவாரண பலியைச் செலுத்தும் என்பதை நிரூபிக்கிறது. ஆனால் இரு சமாதான பலிகள் செலுத்தப்படுவதென்பது நிஜ நிறைவேறுதலான இரு அப்பங்களும் (சிறுமந்தை மற்றும் திரள் கூட்டத்தார்) அவர்களுடைய பிரதிஷ்டையின் பொருத்தனைகள் மரண பரியந்தமும் விடாமுயற்சியோடு நிறைவேற்றுவார்கள் என்பதை நிரூபிக்கிறது. மேலும் அசைவாட்டப்படுகிற இரு அப்பங்களும் புளிப்பாகப் பாகம் பண்ணப்பட்டிருந்தன (லேவி. 23:17). அவைகளுடைய நிஜ நிறைவேறுதலான நபர்கள் அதிகமாகவோ குறைவாகவோ சீர்கேடான நிலையாகிய மாம்சத்திலிருந்தார்கள் என்பதை நிரூபிக்கின்றன.

17. இந்த கருத்துகள் பின்வரும் காரியங்களைத் தெளிவாகக் காண்பிக்கின்றன: பெந்தெகொஸ்தே அன்று அசைவாட்டும் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட <u>இரு அப்பங்கள் புதுசிருஷ்டிகளின் இரு வகுப்பாரை</u> அவர்களுடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்னான நிலையில் அல்லாமல், அவர்கள் <u>பலி செய்யும் நிலையில்</u> அவர்களை <u>அடையாளப்படுத்துகின்றன</u> (ஆனால் முதற்பலன்களில் முதல் பழுத்த கதிர்க்கட்டானது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு கர்த்தராகிய யெஷுஆவை அடையாளப்படுத்துகிறது). இந்த இரு அப்பங்கள் புதுசிருஷ்டிகள் பலி செய்யும் காலத்தில் அவர்களை அடையாளப்படுத்துகின்றன என்பதை மற்றொரு காரியமும் நிரூபிக்கிறது: <u>இந்த பலிகள்</u> (லேவி. 23:18-20) <u>ஒப்புரவாகுதலின் நாளின் பலிகளின்</u> (எண். 29: 7-11) <u>இரண்டாம் தொகுப்புக்கு</u> (கூடுதலான பலிகள் - இவைகளையும் செலுத்தக் கடவீர்கள் – எண். 29:11) <u>மிகவும் ஒத்தவைகளாக இருக்கின்றன</u> (அவைகளுக்கிடையில் இரு வித்தியாசங்கள் மட்டுமே இருக்கின்றன- அந்த வித்தியாசங்களையும் அதற்குரிய காரணத்தையும் பின்பு பார்ப்போம்): இந்த ஒப்புரவாகுதலின் நாளின் பலிகள் சுவிசேஷ யுகத்தில் சபையானது அதின் நியாயமாக்கப்பட்ட நிலையிலும் பரிசுத்தமாக்கப்பட்ட நிலையிலும் தேவனுக்குப் பிரியமாக இருந்ததை அடையாளப்படுத்தத் திட்டமிடப்பட்டன. ஆகையால் நாம் ஆராய்கிற பெந்தெகொஸ்தே நாளின் பலிகளும் சுவிசேஷ யுகத்திற்குரியவைகளாக இருக்க வேண்டும்.

18. லேவி. 16-ம் அதிகாரத்தில் ஆரோன் மகிமையும் அலங்காரமுமான வஸ்திரங்களை அணிந்து கொண்ட பிறகுதான், சர்வாங்க தகன பலிகள் செலுத்தப்பட்டன (லேவி. 16:24). ஏனென்றால் இந்தக் காட்சியானது, உலகத்தாருக்காகத் தலையும் சரீரமுமாகிய கிறிஸ்து வகுப்பார் செய்த பலி தேவனுக்குப் பிரியமானதாக இருந்ததென்று மில்லினிய யுகத்தில் வெளிப்படுத்தப்படுவதை அடையா

ளப்படுத்துவதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மில்லி - னிய யுகத்தில் கொடுக்கப்படும் இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்களின் மூலம் இது வெளிப் படுத்தப்படும். லேவி. *16*-ம் அதிகாரத்தில் சபை வகுப் பாரின் நியாயமாக்கப்பட்ட நிலையிலும் பரிசுத்தமாக்கப் பட்ட நிலையிலும், யெஷூஆ அவர்களைத் தேவனுக்குப் பிரியமானவர்களாக ஆக்குகிறார் என்பதை அடையாளப் படுத்தும் விதத்தில் எந்த சர்வாங்க தகன பலியும் செலுத்தப்படவில்லை. ஆனால் எண். *29:7 -11* வரையுள்ள வசனங்களில் பாவ நிவாரண பலியோடு (வெள்ளாட்டுக் கடா) சர்வாங்க தகன பலியும் செலுத்தப்பட்டது. இந்த சர்வாங்க தகன பலி சுவிசேஷ யுகத்திற்குரிய காரியமாக இருக்க வேண்டுமென்பதை இது நிரூபிக்கிறது. ஏனென் றால் இது சபையின் பாவ நிவாரண பலியோடு சம்பந்தப் பட்டதாக இருந்தது.

*19.* எண். *29:7-11* இந்த ஏழாம் மாதம் பத்தாம் தேதி உங்களுக்குப் பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்கக் கடவது; அதிலே நீங்கள் யாதொரு வேலையும் செய்யா மல், உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்த ருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், அந்த ஒரு ஆட்டுக்கடாவுக்காக இரண்டு பங்கையும், ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் செலுத்தி, பாவநிவாரணபலியையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் அன்றி, இவைகளையும் செலுத்தக்கடவீர்கள். இந்த சர்வாங்க தகன பலியானது, சிறுமந்தை வகுப்பாருக்காக யெஷூஆவின் பலியைத் தேவன் ஏற்றுக்கொண்டது சுவிசேஷ யுகத்தில் வெளிப் படுத்தப்பட்டதை அடையாளப்படுத்துகிறது. இந்த வெளிப்பாடானது சபை வகுப்பாரின் நியாயமாகுதலிலும் பரிசுத்தமாகுதலிலும் செய்யப்பட்டது. அது இவ்வாறாக நிகழ்ந்தது: சபை வகுப்பார் பாவ நிவாரண பலியாக செலுத்தப்படும் போது (வெள்ளாட்டுக் கடா), அவர்கள் ஆழமான மற்றும் எளிமையான சத்திய கோட்பாடுகளைப் போதிக்கும் போது (போஜன மற்றும் பான பலிகள்) யெஷூஆவின் பலி புண்ணியம் (காளை) சபை வகுப் பாரைத் (ஆட்டுக்கடா) தேவனுக்கு முற்றிலும் ஏற்புடைய வர்களாக ஆக்கினது (பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகள்). இவ்வாறாக இது சுவிசேஷ யுகத்திற்குரிய காரியமாக இருக்கிறது. ஆகையால் இந்த சர்வாங்க தகன பலி யானது, ஆரோன் தன் வஸ்திரங்களை மாற்றிக் கொள்வ தற்கு முன்பு நிகழ்ந்திருக்க வேண்டும். அநேகமாகக் காளை பாவ நிவாரண பலியாக செலுத்தப்பட்ட பிறகு இது செலுத்தப்பட்டிருக்க வேண்டும் (லேவி. *9: 2, 8-11, 12-14*).

*20.* எண். *29:7-11* வரையுள்ள வசனங்களையும் லேவி. *23:18-20* வரையுள்ள வசனங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அங்கே பலி செய்யப்பட்ட மிருகங் களுக்கிடையில் பின்வரும் வித்தியாசங்கள் மட்டுமே இருந்தன என்று நாம் காண்கிறோம்: *(a)* லேவி. *23*-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட சர்வாங்க தகன பலியில் இரண்டு ஆட்டுக்கடாக்கள் இருந்தன, ஆனால் எண். *29*-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட சர்வாங்க தகன பலியில் ஒரு ஆட்டுக்கடா மட்டுமே இருந்தது, *(b)* லேவி.*23*-ம் அதிகாரத்தில் சமாதான மற்றும் அசைவாட்டும் பலிகளாக இரண்டு ஆட்டுக்குட்டிகள் உபயோகிக்கப்பட்டன, ஆனால் எண்.*29*-ம் அதிகாரத்தில் இவைகள் உபயோகிக் கப்படவில்லை. இந்த வித்தியாசத்திற்குரிய காரணம் இவ்வாறாயிருக்கிறது: லேவி. *23*-ம் அதிகாரத்தில் இரண்டு ஆட்டுக்கடாக்களும் இரண்டு ஆட்டுக்குட்டிகளும் உபயோகிக்கப்படும்போது, அது புதுசிருஷ்டிகளின் இரண்டு வகுப்புகளாகிய சிறுமந்தை வகுப்பாரையும் திரள் கூட்டத்தாரையும் குறிக்கின்றன. ஆனால் எண். *29* -ம் அதிகாரத்தில் ஒரு ஆட்டுக்கடா மட்டுமே குறிப்பிடப் படும் போது, அது சிறுமந்தை வகுப்பாரை மட்டுமே குறிக்கிறது. ஏனென்றால் சிறுமந்தை வகுப்பார் மட்டுமே பாவ நிவாரண பலியாக இருக்கிறார்கள், திரள் கூட்டத் தார் பாவ நிவாரண பலியாக இல்லை. ஆகையால் எண்.*29* -ம் அதிகாரத்தில் திரள் கூட்டத்தாரின் மனுஷீகம் எந்த மிருகத்தின் மூலமும் அடையாளப்படுத்தப்படவில்லை.

*21.* எண்.*29*-ம் அதிகாரத்தில் சமாதான மற்றும் அசைவாட்டும் பலியாக ஒரு ஆட்டுக்குட்டியும் குறிப் பிடப்படாதிருப்பதென்பது பின்வரும் காரியத்தைக் காண்பிக்கிறது: சிறுமந்தை வகுப்பாரின் பாவ நிவாரண பலி செலுத்தப்படுவது என்பது, உடன்படிக்கையின் பொருத்தனைகள் தொடர்ந்து இடைவிடாமல் நிறை வேற்றப்படுவதின் மூலம் செய்யப்பட்டது. ஆகையால் சிறுமந்தை வகுப்பாரின் பாவ நிவாரண பலியிலேயே சமாதான மற்றும் அசைவாட்டும் பலி (உடன்படிக்கையின் பொருத்தனைகளை நிறைவேற்றுவது) அடங்கியிருப் பதால், சிறுமந்தை வகுப்பாரின் பலியில் அதைத் தனியாக அடையாளப்படுத்திக் காண்பிப்பது அவசியமில்லை. ஆனால் லேவி. *23*-ம் அதிகாரத்தில் சமாதான மற்றும் அசைவாட்டும் பலிகளாக இரண்டு ஆட்டுக்குட்டிகள் குறிப்பிடப்படுவதற்குக் காரணம் இவ்வாறாயிருக்கிறது: ஒருவேலை சிறுமந்தை வகுப்பார் மட்டுமே குறிப்பிடப் பட்டிருந்தால், ஒரு சமாதான மற்றும் அசைவாட்டும் பலியின் மூலம் அவர்களை அடையாளப்படுத்துவது தேவையாக இருந்திருக்காது.ஏனென்றால் அவர்கள் அவர் களுடைய உடன்படிக்கையின் பொருத்தனைகளை விடாமுயற்சியோடு நிறைவேற்றுவார்களென்பது வெளிப்படையாயிருக்கிறது [அது பாவ நிவாரண பலியின் அடையாளத்திலேயே அடங்கியிருக்கிறது]. ஆனால் இந்த அடையாளத்தில் திரள் கூட்டத்தாரும் இருப்பதால், அவர்கள் பாவ நிவாரண பலியாக இல்லா ததால், அவர்களுடைய பிரதிஷ்டையின் பொருத்தனை களை நிறைவேற்றுவதென்பது, தனியாகச் சமாதான மற்றும் அசைவாட்டும் பலியின் மூலம் அடையாளப் படுத்துவது தேவையாயிருந்தது. ஏனென்றால் திரள் கூட்டத்தார் அவர்களுடைய உடன்படிக்கை பொருத் தனைகளை முடிவு பரியந்தம் நிறைவேற்ற வேண்டும். இங்கே ஒரு வகுப்பார், அதாவது சிறுமந்தை மட்டுமே குறிப்பிடப்படுகிறார்கள் என்று நாம் தவறாக புரிந்து கொள்ளாதபடிக்கு, இரண்டு ஆட்டுக்குட்டிகள் உபயோ கிக்கப்படுகின்றன. வேறு வார்த்தைகளில் சொன்னால், லேவி. *23*- ம் அதிகாரத்தின் காட்சியில் ஒருவேலை திரள் கூட்டத்தார் இல்லாதிருந்தால், சமாதான மற்றும் அசை வாட்டும் பலி அங்கே குறிப்பிடவே பட்டிருக்காது. ஆனால் இந்தக் காட்சியில் திரள் கூட்டத்தாரும் இருப் பதால், தவறான புரிந்து கொள்ளுதலைத் தவிர்ப்பதற் கும், இந்த காட்சியில் இரண்டு வகுப்பார்கள் இருக்கிறார் கள் என்ற சரியான புரிந்து கொள்ளுதலை அளிக்கவும் இங்கே இரண்டு ஆட்டுக்குட்டிகள்_சமாதான மற்றும் அசைவாட்டும் பலியாக உபயோகிக்கப்பட வேண்டிய தாயிருந்தது.

*22.* லேவி. *23:22* உங்கள் தேசத்தின் வெள்ளாண்மையை நீங்கள் அறுக்கையில், வயலின் ஓரத்தில் இருக்கிறதை முற்றிலும் அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிடவேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார். அறுவடையில் சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்குவது சம்பந்தமாக (லேவி.*23:22*-ம் வசனத்தை லேவி. *19: 9, 10*; உபா. *24:19-21* வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்) எளியவன் (திரள் கூட்டத்தார்) மற்றும் பரதேசி (வாலிபரான பாத்திரவான்கள்) என்பவைகளின் நிஜ நிறைவேறுதலானது, *E Vol 4, pp. 374-377, 443-445 and E Vol 6, p. 267-* ல் போதுமான அளவில் விளக்கப்பட்டிருக்கிறது. மேலும் எக்காள சத்தம் எழுப்பப்படுவதின் நிஜ நிறைவேறுதல் (சத்திய செய்தியின் பிரகடனங்கள்) மற்றும் பன்னிரண்டு மாதப்பிறப்புகளின் நிஜ நிறைவேறுதல்கள்(பன்னிரண்டு பிரதான குணநலன்களை அபிவிருத்தி செய்து கொள்வது சம்பந்தப்பட்ட அனுபவங்கள்) *E. Vol 8, pp. 659-681*-ல் விளக்கப்பட்டிருக்கின்றன.

*23.* லேவி. *23:23-25* பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: உங்களுக்கு ஏழாம் மாதம் முதலாந்தேதி எக்காளச் சத்தத்தால் ஞாபகக்குறியாகக் கொண்டாடுகிற பண்டிகை என்கிற சபை கூடும் பரிசுத்த ஓய்வுநாளாய் இருப்பதாக. அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யாமல், கர்த்தருக்குத் தகனபலி செலுத்தவேண்டும் என்று சொல் என்றார். ஒவ்வொரு வருடத்திலும் ஒரு மாத பிறப்பு, அதாவது ஏழாம் மாதம் முதல் தேதி ஒரு பண்டிகையாக இருந்தது (லேவி. *23:24*: எண். *29:1*). அது ஒவ்வொரு வருடமும் ஒப்புரவாகுதல் நாள் மற்றும் கூடாரப் பண்டிகை நிகழும் மாதத்தையும் ஒவ்வொரு ஐம்பதாம் வருடம் யூபிலி வருடம் நிகழும் மாதத்தையும் தொடங்கி வைப்பதால், விசேஷித்த முக்கியத்துவம் வாய்ந்ததாயிருந்தது.

*24.* சுவிசேஷ யுகத்தைப் பொருத்தவரை அது, *2* பேது.*1:5-7* வரையுள்ள வசனங்களில் சொல்லப்பட்ட ஏழாம் குணநலனாகிய தியாக அன்பின் பல்வேறு அம்சங்கள் சம்பந்தமாக ஒரு கிறிஸ்தவனுக்குக் கிடைக்கிற சிலாக்கியங்களை அடையாளப்படுத்துகிறது. இந்த சிலாக்கியங்களில் தேவனுடைய ஜனங்கள் பின்வரும் காரியங்களில் பங்கு கொள்ள வேண்டுமென்று தேவன் கர்த்தராகிய யெஷுஆவின் மூலம் அவர்களுக்குப் போதிக்கிறார் (லேவி. *23:23-25*): *(1)* சாபத்திலிருந்து கிடைக்கிற மில்லினிய யுக ஓய்வை அவர்கள் கருதப்பட்ட நிலையில் அனுபவிக்க வேண்டும் (பரிசுத்த ஓய்வு நாள்), *(2)* அன்பாகவே இருக்கிற தேவனுடைய ஞாபகார்த்தமாகத் தியாக அன்பைப்பற்றிய சத்தியத்தை விசேஷமாகப் பிரகடனம் பண்ண வேண்டும் (எக்காள சத்தத்தால் ஞாபகக் குறியாக: *1*யோவா. *4:8,16*), ஏனெனில் தேவனுடைய ஜனங்களில் இந்த பண்பு பெருக வேண்டுமென்று அவர் விரும்புகிறார் *(1* கொரி. *13;* கொலோ. *3: 14; 1* தீமோ. *1: 5; 1* பேது. *1: 22), (3)* குணநலன்கள், அறிவு, ஊழியம் ஆகியவற்றின் ஆசீர்வாதமான அனுபவங்களில் அவர்கள் எல்லோரும் சேர்ந்து பங்கு கொள்ள வேண்டும் (பரிசுத்த சபை கூடுதல்).

## ஒப்புரவாகுதலின் நாள்
## *(பாவ நிவிர்த்தி செய்யும் நாள்)*

*25.* லேவி. *23:26-28* பின்னும் கர்த்தர் மோசேயை



நோக்கி: அந்த ஏழாம் மாதம் பத்தாந்தேதி உங்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யும் நாளும் சபைகூடும் பரிசுத்தநாளுமாயிருப்பதாக; அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள். அந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும் பாவநிவாரண நாளாயிருக்கிறபடியால், அதிலே யாதொரு வேலையும் செய்யவேண்டாம். ஒப்புரவாகுதலின் நாளை பற்றிய அடையாளத்தையும் நிஜ நிறைவேறுதலையும் நாம் ஆசரிப்புக் கூடார நிழல்கள் என்ற புத்தகத்திலும் மற்ற பல சத்திய எழுத்துக்களிலும் படித்திருக்கிறோம். ஆகையால் இங்கே அதை ஆராய்வது அவசியமில்லை. அந்த நாளை சபை கூடும் பரிசுத்த நாளாக ஆசரிக்க வேண்டுமென்று தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுத்த கட்டளையானது (லேவி.*23:26-28*), தேவனுடைய சுவிசேஷ யுக ஜனங்கள் அதைப் பரிசுத்தமாகக் கருதி, அதற்குரிய பாவ நிவாரண பலியின் சிலாக்கியங்களுக்குள் பிரவேசித்து, அது சம்பந்தமாகக் குணநலத்திலும் அறிவிலும் ஊழியத்திலும் ஆசீர்வாதமான சிலாக்கியங்களில் பங்கு கொள்ளவும், தேவன் அவர்களுக்குக் கொடுத்த கட்டளையை அடையாளப்படுத்துகிறது.

*26.* லேவி. *23:29-32* அந்நாளிலே தன்னைத் தாழ்மைப்படுத்தாத எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான். அந்நாளிலே ஒரு ஆத்துமா யாதொரு வேலையைச் செய்தால், அந்த ஆத்துமாவை அவன் ஜனத்தின் நடுவிலே வைக்காமல் அழிப்பேன். அதில் நீங்கள் எந்த வேலையும் செய்யாதிருப்பது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை. அது உங்களுக்கு விசேஷித்த ஓய்வு நாள்; அதில் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்த வேண்டும்; அந்த மாதத்தின் ஒன்பதாந்தேதி சாயங்காலம் துவக்கி, மறுநாள் சாயங்காலம்மட்டும் உங்கள் ஓய்வை ஆசரிக்கக்கடவீர்கள் என்றார். சாபத்தின் காரியங்களிலிருந்து கிடைக்கப் போகிற மில்லினிய யுக ஓய்வை கருதப்பட்ட நிலையில் விசேஷித்த அர்ப்பணிப்புடன் அனுசரிக்க வேண்டுமென்று அவர்கள் எல்லோருக்கும் கட்டளையிடப்பட்டது. இந்த கட்டளையை விருப்பத் துணிவுடன் விடாப்பிடியாக மீறுபவர்களின் தண்டனையாக அவர்கள் அவர்களுடைய நிலையை இழந்து விடுவார்கள் (லேவி.*23:29-31*). ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கு இது இரண்டாம் மரணத்தை அர்த்தப்படுத்தும் (எபி. *6: 4-6; 10: 27-31*). இந்த காரியம் தொடர்ந்து இடைவிடாமல் செய்யப்பட வேண்டியதாயிருந்தது (லேவி. *23:32*).

## கூடாரப் பண்டிகை

*27.* கூடாரப்பண்டிகை அல்லது சேர்ப்பு கால



பண்டிகையில் இஸ்ரயேலர்கள் பல வகையான மரங்களின் கிளைகளைக் கொண்டு கூடாரங்களைச் செய்து அவைகளில் வாசம் பண்ணி, அதில் பெரிதும் மகிழ்ந்தார்கள். இந்த காரியங்கள் லேவி. *23:34-36, 39-43* வரையுள்ள வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன (யாத். *23: 16; 34: 22*; நெகே. *8: 14-18* வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்). இதன் நிஜ நிறைவேறுதல் பல சத்திய எழுத்துக்களில் தெளிவாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது *(EVol 6, p. 535; EVol 8, p. 680; EVol 10, pp. 183-185, 218; E Vol 11, p. 399; E Vol 14, p. 278; E Vol 15, p. 66)*. இது தேவனுடைய சுவிசேஷ யுக ஜனங்கள், விசேஷமாக அறுவடை காலத்து ஜனங்கள்மேல் செய்யப்பட்ட முயற்சிகளினால், அவர்கள் யாவே தேவனுக்கு முன்பாக இறுதியாக அடைந்த வகுப்புக்குரிய நிலைகளை அடையாளப்படுத்துகிறது. இங்கே குறிப்பிடப்பட்ட வகுப்புகளின் நிலைகளாவன: சிறுமந்தை [அலங்காரமான (கனிதரும் – *E Vol 6 p.335*) விருட்சங்கள்], திரள் கூட்டத்தார் (பேரீச்ச விருட்சங்கள்), இரண்டாம் மரணக்காரர்கள் (தழைத்திருக்கிற விருட்சங்கள் – *dense trees* – அடர்த்தியான விருட்சங்கள்), வாலிபரான பாத்திரவான்கள் (அலரிச் செடிகள்).

*28.* இவ்வாறாக இந்த காரியங்கள் நெகெ. *8 :15* மற்றும் ஏசா. *41:19*-ம் வசனங்களில் சொல்லப்பட்ட காரியங்களுக்கு மிகவும் ஒத்ததாயிருக்கிறது. அவ்வசனங்களின் காரியம் பரூஷியா மற்றும் எபிப்பெனி காலத்திற்குப் பொருந்தும். ஏசா. *41:19*-ம் வசனத்தின் சூழ்நிலை அமைப்பு காண்பிப்பதைப் போல் அதற்கொரு மில்லினிய யுக பிரயோகமும் இருக்கிறது (ஏசா. *41:17,18*; சங். *107: 35*; ஏசா. *35: 6, 7; 44: 3*; எசே. *36: 25-27*; *E Vol 15, pp. 559, 560; E Vol 17, p. 331, top.*). அந்த பிரயோகத்தில் மனுகுலத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட ஏழு வகுப்புகளும் குறிப்பிடப்படுகின்றன. அது இவ்வாறாயிருக்கிறது: இரட்சிக்கப்பட்ட தெரிந்து கொள்ளப்படாத வகுப்பார் (கேதுரு மரம்), ஒரு வித கருத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார் (சீத்திம் மரம்), பிரதிஷ்டை செய்த எபிப்பெனி பாளயக்காரர்கள் (மிருதுச்செடி), சிறுமந்தை (ஒலிவ மரம்), மூப்பரான பாத்திரவான்கள் (தேவதாரு விருட்சம்), திரள் கூட்டத்தார் (பாய்மர விருட்சம்), வாலிபரான பாத்திரவான்கள் (புன்னை மரம்). இவ்வாறாக இங்கே இறுதியாகப் பூமிக்குரிய சுதந்தரத்தை அடைய போகிற வகுப்பார்கள் முதலில் குறிப்பிடப்படுகிறார்கள். அவை கள் அவைகளுக்குரிய முக்கியத்துவத்தின் படி கீழ்நிலை யிலிருந்து உயர்நிலை நோக்கி செல்கின்றன. அதைத் தொடர்ந்து இறுதியாக ஆவிக்குரிய சுதந்தரத்தை அடைய போகிற நான்கு வகுப்பார்கள் அவர்களுடைய முக்கியத் துவத்தின்படி, உயர்நிலையிலிருந்து கீழ்நிலையை நோக்கி குறிப்பிடப்படுகின்றன.

*29.* முதல் நாளும், பண்டிகையின் ஏழு நாட்களைத் தொடர்ந்து வரும் எட்டாம் நாளும் பரிசுத்த சபை கூடுதலின் நாட்களாக இருந்தன. இவைகள் இரு அறுவடைகளின் காலங்களில் (விசேஷமாக எபிப்பெனி காலம் உட்பட) வாழ்ந்த தேவனுடைய ஜனங்கள் அவர்களுடைய பல்வேறு வகுப்புகளின் நிலையில் ஒன்றாகக் கூடி அனுபவித்த விசேஷித்த ஆசீர்வாதமான அனுபவங்களையும் சிலாக்கியங்களையும் அடையாளப்படுத்துகிறது *(E Vol 10, pp. 183-185; PT 1954, p. 12, par. 3)*. தேவனுடைய ஜனங்கள் தொடர்ந்து அவைகளில் களிகூருவார்களாக.

*30.* லேவி. *23:36*-ம் வசனத்துடன் பரிசுத்த சபை கூடுதலுக்குரிய வருடாந்தர பண்டிகைகள் எல்லாவற்றின் பட்டியல் முடிகிறது. சுவிசேஷ யுகத்தில் தேவனுடைய செயலியக்கியாகிய யெஷுஆ, யாவே தேவனால் நியமிக்கப்பட்ட இந்த பண்டிகைகளை, அவருடைய ஜனங்கள் மகிழ்ச்சியுடன் பரிசுத்தமாக அனுசரிக்க வேண்டிய காலங்களாக அறிவித்தார் (லேவி.*23:44*;எண். *29: 39, 40*). மேலும் மில்லினிய யுகத்திலும் புது உடன்படிக்கையின் கீழுள்ள தேவனுடைய ஜனங்களுக்கும் இதையே அறிவிப்பார். நாம் இந்த பண்டிகைகளின் நிஜ நிறைவேறுதல்களை அனுசரிக்கும்போது, அதை அறிவு பூர்வமாகவும் ஆவியோடும் உண்மையோடும் தேவனைத் தொழுது கொண்டும் செய்ய வேண்டும். இவ்வாறாக அதற்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்று கொள்ளும் ஏற்ற மனநிலையில் எப்பொழுதுமே இருக்க வேண்டும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

***உங்கள் கவனத்திற்கு***

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது

## ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.

*கலா . 6:2*


# புது உடன்படிக்கை

*Monthly newsletter published by the brethren of the Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*